விலை சதம் 5

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	„	12-00
1 வருடச் சந்தா	„	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லேம்

புத்தகம் 1 | கொழும்பு சர்வஜித்து ஆண்டு புரட்டாசி மீ 23உ வியாழக்கிழமை — Colombo, October, 9, 1947 — ஹிஜிரி 1366 துல்கஃதா பிறை 23 | இதழ் 128

புதிய அரசியல் திட்டம் புகுத்தப்படின் புரட்சியுண்டாகும்

31 வயதுள்ள வர்த்தக மந்திரி

நோவல் பேக்கர் சாம்ராஜ்ய உறவு மந்திரியானார்

பிரிட்டிஷ் மந்திரி சபையின் புனரமைப்பு

லண்டன், அக். 7

சர். ஸடாபோர்ட் கிரிப்ஸை பொருளாதார மந்திரியாக நியமித்தது முதல் பிரிட்டிஷ் மந்திரி சபையை மாற்றியமைக்கும் பிரதமர் அட்லி 8 நாட்களாக செய்து வந்த ஆலோசனை முடிவுற்றது மந்திரி சபை பலம் பொருந்தியதாக மாற்றியமைக்கப்பட்டு விட்டது. 31 வயதுள்ள ஹெரால்டு வில்சன் வர்த்தக மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். நோவல் பேக்கர் சாம்ராஜ்ய உறவு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். குடியேற்றநாட்டு மந்திரி பதவியில் மாற்றமில்லை. மற்ற புதிய மந்திரிகளும் பதவி மாறிய மந்திரிகளும் பின் வருமாறு:-

விமான மந்திரி ஆர்தர் ஹென்டர்சன்; ஸ்காட்லந்து மந்திரி ஆர்தர் வுட்பர்ன்; நிலக்கரி மந்திரி ஹ்யூ கெயிட்ஸ் கெல், சப்ளை மந்திரி ஸட்ராஸ்; பென்ஷன் மந்திரி ஜார்ஜ் புக்கனன்; மந்திரி சபையில் இடம் பெறாத யுத்த மந்திரி ஷின்வெல்; லார்டு பிரிவிசில் லார்டு அடிஸன்.

விலகிக்கொண்டவர்கள் ஜான் வில்மட், ஜான் பெலிங்கர், ஜோசப் வெஸட்வுட், ஆர்தர் கிரீன்வுட், ஜான் ஹின்ட் ஆகியோர்.

19 மந்திரி ஸதானங்கள் 18 ஆகக் குறைக்கப்பட்டிருக்கின்றன. பாராளுமன்றக் காரியதரிசிகள் அதாவது உப மந்திரிகளும் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மாறுதலில் 30 பாராளுமன்ற அங்கத்தினர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்.

(ராய்ட்டர்)

செனட் சபை அங்கத்துவம்

கவர்னருக்கு நூற்றுக் கணக்கான மகஜர்கள்

கொழும்பு, அக். 8

கவர்னர் வீட்டை நோக்கி கடந்த சில நாட்களாக கடிதங்கள் பல நூற்றுக்கணக்கில் பறந்துகொண்டிருக்கின்றன. செனட் சபைக்குச் சென்றுவிட ஆசைகொண்டவர்களின் ஆதரவுக் கடிதங்களாகவே இவை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மொத்தம் 500 இத்தகைய கடிதங்கள் இதுவரை சென்றிருக்கின்றனவாம்.

கவர்னர் மாளிகையில் இருந்தும் பல கடிதங்கள் புறப்பட்டிருக்கின்றன. இவை வியாபார, தோட்ட முதலாளிகள் ஸ்தாபனங்களுக்கு செனட் சபைக்குத் தகுந்த பெயர்களை சமர்ப்பிக்கும்படி வேண்டி எழுதப்பட்டவையாகும்.

செனட் சபைக்கு கீழ்நாட்டுப் பொருள் சங்கம் தமது தலைவர் சார்ள்ஸ ஏ. எம். டி சில்வா அவர்களின் பெயரைச் சமர்ப்பிக்கலாம் என்று அறியப்படுகிறது.

இந்திய வர்த்தக சேம்பர் திரு மூஸாஜீ யையோ திரு. ஐ எக்ஸ். பெரேராவையோ சிபார்சு செய்யலாம் என்று கூறப்படுகிறது.

அரசியல் நிர்ணய சபை அமைக்கப்படவேண்டும்

மலேயா மக்களின் கிளர்ச்சியும் சுயமரியாதை உணர்ச்சியும்

இந்தியன் காங்கிரஸ் தலைவர் எச்சரிக்கை

குடியேறிய ஆசியாக்காரர் மீது பிரிட்டிஷ் கவர்னர் பாய்கிறார்

மலேயாவிலுள்ள பிரிட்டிஷ் அதிகாரிகள் மீது பிரிட்டிஷ் பத்திரிகையின் குற்றச்சாடு

மலேயா மக்களிடையே சுதந்திர வேட்கை ததும்பிக் கொண்டிருக்கிறது. அடுத்த வருட ஆரம்பத்தில் பிரிட்டன் தன்னிச்சைப்படி புகுத்த விரும்பும் புதிய ஐக்கிய அரசியல் திட்டத்தை பொதுஜனங்கள் ஆட்சேபித்து பலமான கிளர்ச்சி நடத்துகின்றனர். அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்தி பொது ஜனப் பிரதிநிதிகள் வகுக்கும் அரசியல் திட்டமே மலேயாவில் அமுல் செய்யப்படவேண்டுமென்று பொது மக்கள் மும்முரமான கிளர்ச்சி செய்கிறார்கள். இந்த நேர்மையான போக்கை உணராத பிரிட்டிஷ் கவர்னர் அங்கு குடியேறியுள்ள ஆசியா மக்கள்மீது பழி சுமத்தி தப்பிக்கொள்ளப் பார்க்கிறார்.

சிங்கப்பூர், (தபால்) மலேயாவில் அடுத்த வருடம் புகுத்தப்படவிருக்கும் புதிய அரசியல் திட்டத்தை பொது ஜனங்கள் எதிர்த்து நடத்திவரும் கிளர்ச்சி நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. பொதுமக்கள் நாடெங்கும் புதிய அரசியல் திட்டத்தைக் கண்டித்து ஹர்த்தால் அனுஷ்டிக்கும் நிலைமைக்கு வந்து விட்டார்கள். இந்நிலை கண்டு மலேயா யூனியன் அரசாங்கத்துக்கு ஆத்திரம் பொங்குகிறது. தேள் கொட்டியது போல் துடிதுடிக்கிறார்கள். அதனால் அரசாங்கம் பலவிதமான அடக்கு முறைகளைக் கையாளுவதுடன் நிற்காது; தாறுமாறான பேச்சுக்களையும் உளறிக் கொட்டுகிறார்கள்.

செப்டம்பர் 28-ம் தேதியன்று மலேயா யூனியன் சர்க்காரின் கவர்னர் சர். எட்வர்ட் ஜென்ட் ரேடியோவில் பேசிய போது மலேயாவில் குடியேறிய பேர்வழிகளின் தூண்டுதலாலேயே ஹர்த்தால் நடைபெறுகிறதென்றும் இந்த விரும்பத்தகாத குடியேற்றக்காரர்களின் செய்கை வெறுக்கத்தகுந்த முறையில் கண்டிக்கப்படவேண்டுமென்றும் தெரிவித்தார். அதற்கு முன் மலேயா யூனியன் சர்க்கார் எல்லா அரசாங்க உத்தியோகஸ்தர்களையும் எச்சரித்து ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அரசியல் காரணமாக அரசாங்கத்திற்கு நிர்ப்பந்தத்தை உண்டுபண்ணும் நடவடிக்கைகளில் கலந்து வேலைக்கு வராமல் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வேலை நிறுத்தம் செய்வார்களேயாகின், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமென்று எச்சரிக்கை விடுத்தார்கள்.

மலேயா மக்களுக்கு ரேடியோ பிரசங்கம் செய்த போது கவர்னர் சர். எட்வர்ட் பின்வருமாறு தெரிவித்தார்:-

விரும்பத்தகாத இந்தக் குடியேற்ற வாசிகளின் குழப்படியால் நாட்டின் சுபீட்சம் தடைபடுகிறது. ஆதலால் இது சம்பந்தமாக அரசாங்க உத்தியோகஸ்தர்கள் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் மலேயாவிலேயே பிறந்து வளர்ந்த மலேயா சுதேச மக்களும் தாங்கள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது இந்த குடியேற்ற வாசிகளின் கிளர்ச்சிகளை வெறுக்க வேண்டும்.

இந்தியத் தலைவர் எச்சரிக்கை

கவர்னர் பேசிய அதே தினத்தில் கோலாலம்பூரில் மலேயாவிலுள்ள சகல வகுப்பினரும் கலந்திருந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் மலேயா இந்தியன் காங்கிரஸ தலைவர் சர்தார் பூத சிங் பேசினார்.

மலேயாவில் மக்கள் விரும்பாத புதிய அரசியல் திட்டம் புகுத்தப்படுவதைக் கண்டிப்பதற்காக இக்கூட்டம் நடைபெற்றது. சர்தார் பூதசிங பேசியதாவது:-

புதிய அரசியல் திட்டத்தைக் குப்பையில் எறிந்துவிட வேண்டும். சர்வஜன வாக்குரிமையோடு மலேயா பிரஜைகள் தெரிந்தெடுக்கும் பிரதிநிதிகளடங்கிய அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்தவேண்டும். மலேயாவைத் தாயகமாகக் கருதும் எல்லாப் பிரஜைகளும் வாக்களிக்க வேண்டும். இவர்கள் மலேயா நாட்டின் மீது என்றும் விசுவாசம் காட்டுகிறவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஜனப் பிரதிநிதிகளடங்கிய அரசியல் நிர்ணய சபை வகுக்கும் அரசியல் திட்டமே அமுல் செய்யப்படவேண்டும்

இப்பொழுது பிரிட்டன் புகுத்தவிருக்கும் புதிய அரசியல் திட்டம் ஓர் அடிமை சாசனமேயாகும். இந்த அடிமைச் சாசனத்தை மலேயா மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இப்புதிய அடிமை சாசனமான புதிய அரசியல் திட்டத்தை, அடிமைப் புத்தியுள்ள சில அரசியல் வாதிகள், பிரிட்டன் தட்டிக்கொடுப்பதில் ஆனந்தமடையும் அற்ப சந்தோஷிகள். சுயநலவாதிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

அறபு பாஷாபிவிருத்தி சங்கம்

முதலாவது வருடாந்தக் கூட்டம்

கொழும்பு, அக். 8

அறபு பாஷாபிவிருத்திச் சங்கத்தின் முதலாவது வருடாந்தக் கூட்டம் கொழும்பு சஹீரா கல்லூரியில் நடைபெற்றது. டாக்டர் ஐயன் சான்டிமன் தலைமை வகித்தார். அவ்வமயம் தமது தலைமைப் பிரசங்கத்தில் பேசியதாவது:- "அறபு பாஷாபிவிருத்திச் சங்கம் தொடங்கியபின் இதுவே முதலாவது வருடாந்தக் கூட்டமாகும். இலங்கையில் இதுவரை இருந்த பெருங் குறையை இச்சங்கம் நீக்கிவிட்டது. சிங்களம், பாளி, சமஸ்கிருதம் ஆகிய மூன்று பாஷைகளிலும் உயர்தர பரீட்சைகள் நடத்துவதற்கான சங்கம் ஒன்று பௌத்தர்களுக்காக அநேக வருடங்களாக வேலை செய்து வருகின்றது. அது போலவே தமிழ், சமஸகிருதம் ஆகிய இருபாஷைகளிலும் உயர்தர பரீட்சைகள் நடத்துவதற்கான சங்கம் ஒன்று இந்துக்களுக்காக வேலை செய்து வருகின்றது. ஆனால் முஸ்லிம்களின் விஷயத்தில் மட்டும் தான் அறபு பாஷையை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத் தொடர்புள்ள சங்கம்ஒன்று இதுவரை இருக்கவில்லை. இக்குறை இப்பொழுதுநீங்கி அறபு பாஷாபிவிருத்திச் சங்கம் நிறுவப் பெற்றுளது.

சென்ற வருடத்தில் எங்கள் சங்கத்தின் காரிய நிர்வாகசபை சோம்பலாகஇருக்கவில்லை.பரீட்சைகள்நடத்துவதற்குரியபூரண திட்டத்தை அது வகுத்துக் கொண்டது மிக முக்கியமான வேலை என நான் கருதுகிறேன். இந்த வேலை இரு உபசபைகள் கூடிச் செய்த முயற்சியால் முடிக்கப்பட்டது. காரிய நிர்வாக சபையே பரீட்சை சபையையும் ஏற்படுத்திவிட்டது. இச்சபை அக்டோபர் மாதத்தில் கூடி பரீட்சைத் திட்டத்தை முடிவாகஅங்கீகரிக்கும் எனவே அடுத்த வருடம் பரீட்சைகளை நடத்தலாம்என்றுகருதுகிறோம்.

பொதுக்கூட்டம் நடத்துவதற்கு மிகவும் வசதியான காலம் ரம்சானுக்குப் பின்பு தான் என்பது சென்ற வருட அனுபவத்திலிருந்து தெரிய வந்தது. இதனால் இந்தச்சங்கத்தின் கணக்குகளையும் தயாரிக்கப் போதிய காலம் உண்டு. இந்த வருடத்தில், கணக்கு விவரத்தை கணக்குப் பரிசோதனை அதிபர் நேரதோடு பரிசோதிக்க முடியவில்லை. ஏன் என்றால், இப்பொழுது உள்ள அரசியல் மாற்றம் காரணமாக ஏனைய அரசாங்கப் பகுதிகளைப் போலவே, கணக்குப் பரிசோதனைப் பகுதிக்கும் அதிக வேலை உண்டு இந்தக் கணக்கு விவரம் பற்றி கணக்குப் பரிசோதனை அதிபர் சொல்லும் குறிப்புகள் அடுத்த பொதுக் கூட்டத்திலே சமர்ப்பிக்கப்படும்.

இன்று நிகழ்ச்சி நிரலில் இரண்டு தீர்மானங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று இந்தச் சங்கத்தின் போஷகராக இருக்கும்படி உத்தம தேசாதிபதி அவர்களை வேண்டிக் கொள்வதாகும். இந்தச் சங்கத்துக்கு போஷகராக உத்தம தேசாதிபதியவர்கள் இருப்பதன் நன்மையை நான் எடுத்துக்கூற வேண்டியதில்லை. அடுத்த தீர்மானம் இலங்கை சர்வகலாசாலையில் உள்ள அறபு பேராசிரியரை இந்தச் சங்கத்தின் கௌரவ அங்கத்தவராகச் சேர்த்தலாகும். சர்வகலாசாலை ஒரு அரசாங்க ஸ்தாபனம் அல்ல. ஆகையால் அரசாங்க உத்தியோகஸ்தர் என்ற பாகுபாட்டுக்குள் அவரைச் சேர்க்க முடியாது. என்றாலும் அறபு பேராசிரியர் எவராக இருந்தாலும் அவருடைய உதவியும் ஒத்துழைப்பும் எங்கள் சங்கத்துக்கு அவசியம் தேவைப்படும். ஆகையால் அவரை ஒரு கௌரவ அங்கத்தவராக சேர்ப்பது நியாயமானதாகும்

எங்களுடைய பரீட்சைகளின் பயனாக அநேக நன்மைகள் ஏற்படும் என எதிர்பார்க்கிறோம் அவற்றால் ஆசிரியர்களைத் தெரிவுசெய்துகொள்வது மட்டும் அன்றி, அநேக ஆராய்ச்சி அறிஞர்களும் தோன்றுவார்கள் என எதிர்பார்க்கிறோம். ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய பண உதவியை அரசாங்கம் தந்து உதவும் எனவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்."

சர்வதேச கமியூனிஸ்ட் ஸ்தாபனத்தை பிரிட்டிஷ் தலைவர் வரவேற்கிறார்

அமெரிக்க ஆக்கிரமிப்புகளுக்கு பிரிட்டன் உடந்தை

இலங்கையில் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட முயற்சிக்கும் பிரிட்டிஷ் தொழிற்கட்சி சர்க்கார் மீது குற்றச்சாட்டு

லண்டன், அக் 7

பிரிட்டிஷ் கமியூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி திரு. ஹாரி போவிட் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டார்:- 9 ஐரோப்பிய நாடுகள் சேர்ந்து சர்வதேச கமியூனிஸ்ட் பிரசாரஸ்தாபனத்தைநிறுவியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

பிரிட்டனில் அமைதியையும் தேசீய சுதந்திரத்தையும்,பொருளாதார சுபீட்சத்தையும் நிலைநாட்ட எனது கட்சி அமெரிக்க டாலர் ஆதிக்கத்தையும் சர்வாதிகாரத்தையும் எதிர்த்துப் போராடுவதுடன், அமெரிக்க பணக்கொள்ளை மூட்டைகளுக்கு ஆதரவளித்துச் சதி செயயும் சர்ச்சில் கோஷடியாரையும், பிரிட்டிஷ தொழிற் கட்சியைச் சேர்ந்த பிற்போக்கு வாதிகளையும் எதிர்த்துப் போராட்டம் நடத்தும்.

ஜெர்மன் முதலாளித்துவ ஆதிக்கத்தை மீண்டும் கை தூக்கிவிட அமெரிக்க அந்நிய நாட்டுமந்திரி மார்ஷலும் பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரி பெவினும் போடும் திட்டங்கள் மற்ற ஐரோப்பிய நாடுகளின் மனதிலே பயத்தையும் திகிலையும் உண்டாக்கியிருக்கின்றன. அதன் காரணமாகவே போலந்தில் நடைபெற்ற மகாநாட்டில் அப்படித் திகிலுறும் நாடுகளின் கமியூனிஸ்ட் கட்சிகள் கலந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியம் வெளிநாடுகளை பொருளாதார ஆதிக்கங் கொள்வதில் முனைந்திருக்கிறது அதற்கு பிரிட்டிஷ் தொழிற் கட்சி அரசாங்கம் உடந்தையாக இருந்து ஆதரவளிக்கிறது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை மீண்டும் நிலைநிறுத்தவே இவ்விதம் பிரிட்டன் அமெரிக்காவைத் தொத்திக் கொண்டும் நத்திக் கொண்டும் திரிகிறது. கிரீஸ், இந்தோனேஷியா, பாலஸ்தீனம், பாரசீகம், பர்மா, இந்தியா, மலேயா, இலங்கை ஆகிய நாடுகளில் பிரிட்டிஷ் தொழிற் கட்சி அரசாங்கம் கையாளும் நடவடிக்கைகளே இக்கூற்றுக்கு நிதர்சனமாகும்.

உலக அபிப்பிராயங்கள்

சர்வ தேசங்களிலும் கமியூனிஸத்தைப்பரப்பவே முன்னிருந்த கோமின்டர்னைப் போல இப்பொழுது பெல்கிரேடில் ஸ்தாபனம் நிறுவப்பட்டிருக்கிறதென்றும் முன்போல் மறைமுகமாகவன்றி இப்பொழுது பகிரங்கமாக இப்பிரசாரத்தை நடத்த முன் வந்திருப்பதுபற்றி சந்தோஷப்படுவதாகவும் பிரிட்டிஷ் அந்நியநாட்டுக் காரியாலயத்தார் உத்தியோக தோரணையில் தங்கள் கருத்தை வெளியிட்டனர். இதனால் சர்வதேச அரசியல் உறவுகளில் சீர்குலைவு ஏற்படுமென்றார்கள்.

ஐரோப்பாவை விழுங்க ரஷியா முன்வந்திருக்கிறதென்றும் ஜனநாயக முறையே சிறந்ததென்பதை ருசுப்பிக்க அமெரிக்கா காரியாம்சத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நியூயார்க் 'ஹெரால்டு ட்ரிப்யூன்' பத்திரிகை எழுதுகிறது.

போலந்து மகாநாடு ரஷிய ஏகாதிபத்திய ஆதிக்கத்தை நிலைநாட்ட முன்வந்திருக்கிறதென்றும் ஜனநாயக நாடுகள் தங்களைப் பாதுகாக்க ஊக்கமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் நியூயார்க் டைம்ஸ எழுதுகிறது

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அடியோடு ஒழிக்கவேண்டுமென்று ஆஸ்திரிய கமியூனிஸட் பத்திரிகை செரிவிக்கிறது. பிரஞ்சு சோஷியலிஸ்ட் தலைவர் பிளம பிரஞ்சு கமியூனிஸடுகள் போலந்து மகாநாட்டில் கலந்து கொண்டது துரோகமென்று உறுமினார்.

அமெரிக்கா பிரிட்டன் சூழ்ச்சி

மாஸகோ, அக். 7

'இஸவெஸ்டியா' பத்திரிகையின் ஐக்கிய தேச ஸ்தாபன நிருபர் எழுதுவதாவது:-

பாதுகாப்பு கவுன்ஸிலில் காலியான ஸ்தாபனத்தின் தேர்தலில் அமெரிக்காவும் பிரிட்டனும் சூழ்ச்சி செய்கின்றன. ரஷியாவுக்கும் இந்தியாவுக்கும் பகையுண்டாக்க முயற்சிக்கின்றன.

பாதுகாப்பு கவுன்ஸில் கொள்கையை பழுதாக்க ரஷியா விரும்பவில்லை.உலகசுதந்திரத்திற்கு அரும்பாடுபட்டஉக்ரைனை ஆதரிப்பது அவசியமென்பது தான் ரஷியாவின் நோக்கம்.

அமெரிக்க பொருளாதாரம் சீர்குலைகிறது

மாஸ்கோ, அக் 7

'போல்ஷிவிக்' என்ற சோவியத் சஞ்சிகைஎழுதுவதாவது:

அமெரிக்காவில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அமெரிக்க முதலாளிகள் தங்கள் மூலதனத்தை வெளிநாடுகளில் முடக்குவதற்காக வெளிநாடுகளில் ராணுவத்தை நிறுவிவருகிறார்கள். அதற்காக ஜனநாயகத்தை ஒழிக்க சமீப கிழக்கு நாடுகளிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும், தூரகிழக்கு நாடுகளிலும், ஐரோப்பாவிலும், ஆசியாவிலும், சைனாவிலும், ஆஸ்திரேலியாவிலும், ஆப்பிரிக்காவிலும் மும்முரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அமெரிக்காவின் இவ்வித டாலர் ஆதிக்கத்தை நிறுவ பிரிட்டனும் உடந்தையாக இழுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை இந்தியப் பிரச்னைக்கு முடிவு

அரசாங்கத்தின் முதலாவது அலுவல்?

கொழும்பு, அக். 8

இலங்கைப் பிரதமர் திரு. டி. எஸ் சேனநாயக்கா இலங்கை இந்தியப் பிரச்னையை அதிசீக்கிரமாகத் தீர்த்து வைக்க முயலுவார் என்று தெரிகிறது. இது புதிய அரசாங்கததின் முதலாவது முயற்சியாய் இருக்குமென்றும், மந்திரி சபை தனது வேலையை ஆரம்பித்ததும் இதையே முதலாவதாகச் செய்யும் என்றும் சொல்லப்படுகிறது.

இதற்கு முன்னர் 1945-ம் வருஷம் பாஜ்பாய்-சேனநாயக்கா பேச்சு வார்த்தை நடந்த போதும் இலங்கை இந்தியர்களின் பிரஜா வாக்குரிமைகள் பற்றி எவ்வித திருப்திகரமான முடிவும் ஏற்படவில்லை என்பது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும்.

பாராளுமன்ற அங்கத்தினருக்கு ரூ. 700 சம்பளம்

மந்திரி சபையின் முதலாவது கூட்டம்

கொழும்பு, அக். 8

இன்று காலை மந்திரி சபையின் முதலாவது கூட்டம் நடைபெற்றது. அங்கு கீழ்க் கண்ட மாதச் சம்பள விகிதங்கள் ஆலோசிக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம்.

பிரதமர்: சம்பளம் 1500 ரூ. உபசரிப்பு அலவன்ஸ் 1500 ரூ.

மந்திரிமார்: சம்பளம் 1500 ரூ உபசரிப்பு அலவன்ஸ 500ரூ.

பிரதிநிதி சபை அங்கத்தினர்: சம்பளம் 700 ரூ

செனட் சபை அங்கத்தினர்: சம்பளம் 400 ரூ.

சபாநாயகர்: சம்பளம் 1500 ரூ.

கவர்னர் சனிக்கிழமை கொழும்பு திரும்புவார்

கொழும்பு, அக். 9

கவர்னர் தம்பதிகள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு கண்டியில் இருந்து கொழும்பு புறப்படுவார்கள் என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, தட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஞ புரட்டாசி மீ 23உ
வியாழக்கிழமை

கண் திறக்குமா?

மனித வர்க்கத்தின் சரித்திரமே சுதந்திரப் போரின் சரித்திரமாகும். உலக தேசங்களில் அடிமைத்தனத்தையும், கொடுங் கோன்மையையும் எதிர்த்து எவ்வளவோ போராட்டங்கள் நடந்திருக்கின்றன என்பது சரித்திர உண்மை. நம்மையாளும் பிரிட்டிஷாரின் தாயகமான இங்கிலாந்தின் சரித்திரத்தைப் பாருங்கள். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னால் ஆங்கிலேயர் இதர ஐரோப்பியர்களால் அடிமைப்பட்டிருந்தனர். கிறிஸ்தவ மதம் பிரிட்டனிலே பரவுவதற்கு முன்னால், இங்கிலீஷ் பெண்கள் ரோமாபுரியின் கடைத் தெருக்களிலே ஏலம் போடப்பட்டனர். ஆனால் பிரிட்டிஷ் மக்கள் காலக்கிரமத்தில் சுதந்திரம் பெற்றனர். 1066-ம் ஆண்டு வரை பிரிட்டன் அடிமை நாடாக இருந்தது. வில்லியம் என்பவன் ஆட்சி காலத்திலிருந்துதான் ஆங்கில ஜாதியே தலையெடுத்தது.

இது பழைய சரித்திரம். வில்லியத்தின் ஆட்சி காலத்திலிருந்து, ஓர் எண்ணூறு வருட சரித்திரத்தை ஆராய்ந்தால், பிரிட்டிஷ் மக்கள் சுதந்திரத்திற்காக நடத்திய போர்கள் நன்கு தெரியும். கொடுங்கோல் மன்னன் ஜோனை எதிர்த்துப் போராடிய பிரிட்டிஷ் மக்கள் "மக்னா சாட்டா" என்ற உரிமைச் சாஸனத்தை ஏற்படுத்தினர். உலகின் ஜனநாயகத்துவத்தின் அஸ்திவாரமாக விளங்குகிறது "மக்னா சாட்டா" சாஸனம்.

பதினேழாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் சுதந்திர சக்திகள், மன்னர் முதலாம் சார்ள்ஸைத் தூக்கிவிட்டன. பின்னர் அத்து மீறி நடந்த இரண்டாம் ஜேம்ஸை பிரிட்டிஷ் மக்கள் நாடு கடத்தினர்கள்.

"மன்னராயினும் சுதந்திரத்தை நசுக்கினால் விடோம்!" என்றே பிரிட்டிஷ் மக்கள் கூறி வந்திருக்கிறார்கள். சுதந்திரத்திற்காக, ஜனநாயகத்திற்காக, மக்களின் உரிமைகளுக்காக நடந்த போர்களின் சரித்திரமே பிரிட்டிஷ் சரித்திரம்.

இச்சரித்திர உண்மைகளை பிரிட்டிஷாரிடம் சென்ற 150 வருடங்களாக அடிமைகளாய் இருந்து படித்த ஆசியா மக்கள் இன்று விழித்துவிட்டார்கள். இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டது. பர்மா சுதந்திரம் பெறப்போகின்றது. இந்தோசீனம், இந்தோனேஷியா முதலிய குட்டி நாடுகள் தங்கள் தங்கள் அரசாங்கத்தை ஏற்படுத்தி சுதந்திரப் போர் புரிகின்றார்கள். ஏன்? பிரிட்டிஷ் குடியேற்ற நாடாகிய மலாயாவில்கூட அரசியல் நிர்ணய சபை வேண்டுமென்று அரசாங்கத்தையும், அங்கு புகுத்தப்படவிருக்கும் புதிய அரசியல் திட்டத்தையும் எதிர்த்து ஹர்த்தால்களும், அரசாங்க ஊழியர் வேலை நிறுத்தங்களும் நடைபெறுகின்றன.

மலாயன் இந்தியன் காங்கிரஸ் தலைவர், சர்தார் புத்தசிங் சென்ற திங்கட்கிழமை ஆங்கு ஒரு கூட்டத்தில், மலாயாவுக்கு வழங்கப்பட்ட புதிய அரசியல் திட்டம் ஓர் புதிய அடிமைச் சாஸனம் என்றும், அதை பொது மக்கள் எதிர்த்து, ஓர் அரசியல் நிர்ணய சபையை வேண்டிக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

இச் செய்தி இலங்கை மக்களின் கண்களைத் திறக்கும் என்றே நம்புகின்றோம். சமீபத்தில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை மக்களில் முக்கால்வாசிப் பேர் சோல்பரித் திட்டத்தை ஆதரித்ததாகக் காணப்படவில்லை. ஆயின் கவர்னர் தமது ஏகாதிபத்தியத்தை இன்னும் ஊன்றியத்தை இன்னும் ஊன்றி வைப்பதற்காக திரு. சேனநாயக்காவை மிகுந்த அவசரத்துடன் பிரதம மந்திரியாக்கினார். திரு. சேனநாயக்காவும் மந்திரிப் பதவிகளைக்காட்டி சில அடிமைத் தாசர்களைத் தம் பக்கம் சேர்த்துக் கருமங்கள் செய்கின்றார்.

ஜனங்களால் ஜனங்களின் நன்மைக்காக நடத்தப்படும் ஜனங்களுடைய ஆட்சிமுறைதான் ஜனநாயக ஆட்சி எனப்படும். இதற்காக ஏற்படுத்தப்படும் சட்டசபைகள் எதேச்சாதிகாரத்தில் முடிவதுமுண்டு. இதற்குச் சான்றாக விளங்கியது எங்கள் பழைய அரசாங்கசபை. அதே மாதிரியான எதேச்சாதிகாரத்தை நோக்கித்தான் இப்பொழுது வரவிருக்கும் பாராளுமன்ற சபையும் கொண்டுசெல்லப்படமாட்டாதென்பதற்கு என்ன சான்றிருக்கின்றது.

சென்ற கால இலங்கை அரசியலில் எவராவது திருப்தியுற்றிருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. இப்பொழுதும் பூரணமான அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. இதற்கிடையில் சாம்ராஜ்ய நாடுகளுக்குட்பட்ட பூரண பொறுப்பாட்சி இலங்கைக்கு பெப்ரவரியில் வழங்கப்படவிருக்கின்றது என்று ஏகாதிபத்திய தாசர்கள் தமுக்கடிக்கின்றனர். ஆகவே அதை உண்மையான ஒரு பொறுப்பாட்சியாக பெற்றுக்கொள்ளுவதாயிருந்தால் இப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையை ஒரு இடைக்கால அரசாங்கமாக்கி, ஒரு அரசியல் நிர்ணய சபையைக் கோருவதுதான் உகந்த முறையாகும்.

அடிமைப்பட்டிருக்கும் நாடுகள் எழுச்சியுற்று விடுதலைப் போரிட்டுச் சுதந்திரத்தை ஸதாபிக்கும் கட்டத்தை நெருங்கும்போது தாங்கள் ராஜீய நிர்வாக அமைப்புகளைத் தயாரிக்கக் கூட்டும் சபைகளே அரசியல் நிர்ணய சபைகளாகும். இந்த அரசியல் நிர்ணய சபையை, வெற்றி பெற்ற புரட்சி சக்திகள்தான் கூட்டுவது வழக்கம். ஆனால் இலங்கை சட்டரீதியாகவே அரசியல் முன்னேற்றத்தை இதுகால வரைக்கும் அடைந்து வந்திருக்கின்றது ஆகவே அரசியல் நிர்ணய சபையையும் இதே முறையில் பலாத்காரமின்றி அஹிம்சா முறையில் பெற்றுக் கொள்ள இப்பொழுதே முயற்சிக்க வேண்டும்.

அரசியல் நிர்ணய சபைக்கு பூரண அரசாங்க அந்தஸது இருக்கும். புதிய அரசியலை நிர்ணயிக்கும் சுதந்திரம் இருக்கும். சுதந்திரப் பிரகடனஞ் செய்யும் அதிகாரமுமிருக்கும் என்பதை ஒருவரும் மறந்து விடக்கூடாது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அட்டைபோல் ஒட்டியிருக்கும் யூ. என். பியினர் அரசாங்கத்தை அகற்றுவது இலகுவல்ல புதிய பாராளுமன்ற முதலாவது கூட்டத்தில் புதிய மந்திரி சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சியினர் கொண்டுவரவிருப்பதாக நாம் அறிகின்றோம். இது வரவேற்கத்தக்கதே. அத்துடன் நில்லாது இலங்கை சுதந்திரத்தை அடைவதற்கு உடனே ஓர் இடைக்கால அரசாங்கத்தையும் அரசியல் நிர்ணய சபையையும் கோருவதே முறையும் தர்மமுமாகும்.

சமஸ்தானங்களில் பொதுஜன வாக்கெடுப்பு

பிரிட்டிஷ் பத்திரிகை ஆலோசனை

லண்டன், அக். 6

சமஸ்தானங்கள் பாக்கிஸ்தானில் சேருவதா அல்லது இந்தியாவில் சேருவதா என்பதைக் குறித்து சமஸ்தானங்களிலுள்ள பொதுஜன வாக்கெடுப்பு மூலம் தீர்மானம் செய்வது நலமென்று "நியூஸ் கிரானிக்கிள்" பத்திரிகை எழுதுகிறது. ஜூனாகத்துக்கு இந்தியத் துருப்புகள் செல்வதும் காஷ்மீரிலும், ஹைதராபாதிலும் புரட்சிகளை உண்டாக்க முயல்வதுமான நடவடிக்கைகளுக்கு இடமிருக்காதென்று அப்பத்திரிகை கூறுகிறது. (ராய்ட்டர்)

இந்திய யூனியனில் நாலரை கோடி முஸ்லிம்கள் நிலைமை

இருதேசக்கொள்கையால் ஏற்பட்டிருக்கும் ஆபத்து

காஷ்மீர் தலைவர் ஷேக் அப்துல்லா எச்சரிக்கை

ஸ்ரீநகர், அக். 5

இந்தியாவிலுள்ள "நாலரைக் கோடிமுஸ்லிம்களுக்குபாக்கிஸ்தான் ஏற்பட்டதால் என்ன நன்மை கிடைத்திருக்கிறது. பாக்கிஸ்தான்வாதிகள் நவகாளியில் கொலை இயக்கத்தை ஆரம்பித்தார்கள். அதற்கும் பீகாரில் எதிரொலி. பிறகு ஹிந்து மக்களும் சீக்கியர்களும் வடஎல்லை மாகாணத்திலும், மேற்குபஞ்சாபிலும்கொலைசெய்யப்பட்டனர். இவைகளுக்கு கிழக்கு பஞ்சாப், டில்லியில் பழிவாங்கப்பட்டது. இவைகள் எல்லாம் ஜனாப் ஜின்னாவின் "இரு தேசக் கொள்கை"யால் விளைந்த அனர்த்தமேயாகும் என்று காஷ்மீர் தேசியத் தலைவர் ஷேக் அப்துல்லா ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார்.

இந்த அனர்த்தங்கள் விளையும் என்று எண்ணியே தாம் பாக்கிஸ்தானை எதிர்த்ததாயும், காஷ்மீர் பாக்கிஸ்தானில் சேர்ந்தாலும், இருதேசக் கொள்கை தேவையில்லை என்றும், பிரஜா ராஜயமும், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சீக்கியரும் சகோதரர் போல் அந்நியோன்யமாக வாழ்வதுமே தமது லட்சியம் என்றும ஷேக் அப்துல்லா விவரித்தார்.

இந்திய முஸ்லிம்களுக்கு ஆகாகான் புத்திமதி

பம்பாய், அக் 6

ஆகாகான் இந்தியாவிலுள்ள தமது முஸ்லிம் சிஷ்யர்களுக்குப் பின்வரும் செய்தியனுப்பியிருக்கிறார்:- இந்திய யூனியன் சர்க்காருக்குப் பூரண விசுவாசம் காட்டுக. தனசரி சர்க்காருக்குப் பிரார்த்தனை நடத்துங்கள். கல்கத்தாவில் நடந்ததைப் போல காங்கிரஸ் கவர்னர்களிடம் சென்று உங்களுடைய விசுவாசத்தைப்பற்றி உறுதிகூறுங்கள்.

பீஹார் முஸ்லிம் தலைவர்கள் அறிக்கை

பாட்னா, அக் 5

பீஹார் லீக் ஜமாயத் கட்சிகளைச் சேர்ந்த 29 பிரபல முஸ்லிம் தலைவர்கள் அக்டோபர் 3-ம் தேதிவிடுத்த வேண்டுகோளில் இந்திய யூனியனிலுள்ள முஸ்லிம்கள் இந்திய யூனியனிடம் பூரண விசுவாசமாக இருக்க வேண்டுமென்று கூறியிருப்பதை வரவேற்று பீஹார் மாகாண ஹிந்து மகாசபைத் தலைவர் கங்கா நந்த ஸின்ஹா ஒரு அறிக்கை விடுத்துள்ளார் இருதேசக் கொள்கையையும் ஜனாப் ஜின்னாவின் தலைமையையும் விடடொழித்து இந்தியயூனியன் முஸ்லிம்கள் இந்திய யூனியனிடம் பரிபூரண விசுவாசத்துடன் இருக்க அந்த அறிக்கை உதவுமென அந்த ஹிந்து மகாசபை தலைவர் கூறுகிறார்.

அண்டை வீட்டு முஸ்லிம்களுக்கு உதவி

ஜலந்தர், அக். 5

தங்கள் அக்கம் பக்கத்து முஸ்லிம்களுக்கு ஹிந்துக்களும் சீக்கிய ரஜபுத்திரர்களும் உதவி செய்து பாதுகாப்பளித்ததாக ஹோஷார்பூர் பாஸுவர் தாஹிஸிலைச் சேர்ந்த மலைப் பிரதேசங்களிலிருந்து செய்தி கிடைத்துள்ளது. அவர்களுக்கு தங்க இடம் கொடுத்தது மட்டுமல்ல, அவர்களுக்கு சாப்பாடு போட்டு அவர்களுடைய சொத்தையும் காப்பாற்றிக் கொடுத்தனர்.

கடைசியாக அவர்கள் அகதிகள் முகாமுக்குச் செல்ல தீர்மானித்தபொழுது அவர்கள் விட்டுப்போகும் சொத்தைப் பாதுகாத்துத் தருவதாகவும் உத்தரவாதம் கொடுத்தனர்.

ஹிந்து அண்டை வீட்டுக்காரர்களிடம் வீடுகளின் சாவிகளை முஸ்லிம்கள் நம்பிக் கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஜபல்பூர் முஸ்லிம்கள் பிரதிக்ஞை

ஜபல்பூர், அக். 5

ஜபல்பூர் முஸ்லிம்கள் ஈத் பக்ரீத் பண்டிகைகளின்போது பசு பலியிடமாட்டார்கள்; மகுதியை சுத்தம் செய்வதற்காக மகுதிமுன் கபாரா பசு பலியிடவும் மாட்டார்கள் என்று ஜபல்பூர் நகர ஜில்லா முஸ்லிம் லீக் தலைவர் மௌலானா புர்ஹானுல் ஹேக் எம். எல். ஏ. மாகாண சர்க்காரால் கூட்டப்பட்ட கூட்டு சமாதான கமிட்டி கூட்டத்தில் அறிவித்தார்.

தையல் ஊசியை விழுங்கிய சிறுமி

கொழும்பு, அக். 8

முகத்துவாரம் டானியல் ரோட்டைச் சேர்ந்த டபிள்யூ. ஏ. மாலின் ரொட்ரிகோ என்ற சிறுமி ஓர் தையல் ஊசியை விழுங்கிவிட்டாள். இதன் காரணமாக மேற்படி பெண் பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளாள்.

ஊசி உடம்பின் எப்பாகத்தில் சிக்கி உள்ளது என்பதைக் கண்டறியஎக்ஸ்ரேபரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

பாம்போடு பழகியவரின் பரிதாப மரணம்

விஷகடி வைத்தியர், நாகப் பாம்பின் கடியால் இறந்தார்

பாணந்துறை, அக். 7

முப்பது வயது நிறைந்த பாம்புகடி வைத்தியர் உடம்பகே டானியல் சில்வா என்பவர் தான் வளர்த்துவந்த ஓர் நாகப் பாம்பின் கடியினாலேயே இறந்துபோனார்.

பிரஸ்தாப வைத்தியர் மேற்படி நாகத்தைக் கொண்டு தமது கையிலே கடிக்கவைப்பது வழக்கமென்றும் அதற்கு மருந்துபோட்டு மாற்றி பொதுமக்கள் முன்னே தமது வைத்தியப் பிரஸ்தாபத்தைப் பிரசாரம் செய்துவருவது வழக்கமென்றும் தெரிகிறது.

சம்பவத் தினத்தன்று ரத்னபுரி சமன் தேவாலயத்தின் முன்றலில் ஒரு ஜனக்கூட்டத்தின் மத்தியிலே தமது கையை மேற்படி பாம்பைக்கொண்டு வழக்கம்போல கடிக்கவைத்தார். அன்றிரவு நோவுண்டாகி அதிக வேதனைப்பட்டதன் காரணமாக தமது இருப்பிடமான அம்பலாங்கொடைக்கு கார் மூலம் கிளம்பினார்.

ஆனால் வழியிலே அவர் ஆவி பிரிந்துவிட்டது.

மூன்று டச்சு சோல்ஜர்கள் விடுதலை

பட்டேவியா, அக். 6

அமெரிக்க விமானத்தில் வந்து இறங்கியபோது இந்தோனேஷிய குடியரசு சர்க்காரால் கைதுசெய்யப்பட்ட 3 டச்சு சோல்ஜர்களையும் விடுதலைசெய்ய சர்க்கார் தீர்மானித்துவிட்டனர். (ராய்ட்டர்)

காரியாதிகாரியைத் தாக்கியதாக வழக்கு

எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்

திரிகோணமலை, அக். 6

மூதூரைச் சேர்ந்த காரியாதிகாரி (டி. ஆர் ஓ) திரு. சிவஞான சுந்தரம் என்பவருக்கு சென்ற ஜூன் மாதம் 9-ம் தேதி யாழ்ப்பாண வத்தை ஒன்றில் சம்பூரில் கள்ளத்தனமாய் நெல்லு ஏற்றப்போவதாகத் தகவல் கிடைத்ததும் டி. ஆர். ஓ. எப். பி. ஓ. வுடனும் மற்றும் சிலருடனும் சம்பூருக்குச் சென்று ஒளிந்திருந்து பார்க்கும்பொழுது இரவு இரண்டரைமணியளவில் 20 அவணம் நெல்லு உத்தரவு சீட்டு இல்லாமல் 4 வண்டிகளில் வருவதைக் கண்டு பிடித்து ஐ. பி. எஸ். ஸடோருக்கு வண்டிகளைத் திருப்பும்படி உத்தரவிட்டபொழுது அவர்கள் மறுத்து தங்கள் வீடுகளுக்கு திருப்பியபொழுது டி. ஆர். ஓ. தடை செய்யவும் டி. ஆர். ஓ. வுக்கும் பி. பி. ஓ. வுக்கும் தாக்கியபொழுது டி. ஆர் ஓ. ரிவால்வரை எடுத்துக்காட்டிய பொழுது அவர்கள் ஓடிவிட்டதாகவும் குற்றம்சாட்டி 1. என். சுப்பிரமணியம், 2. எஸ செல்லையா, 3. எஸ். தம்பையா, 4. எஸ். பொன்னுத்துரை. 5 எஸ். சிவக்கொளுந்து, 6. என். சரவணமுத்து, 7. என். சித்திரவேலு, 8. எஸ். குணநாயகம், 9. கே. கணபதி பிள்ளை, 10. வி. சித்திராவி, 11. கே. சித்திராவி, 12. எம். செல்லத்துரை ஆகியவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு இன்று மாஜிஸ்டிரேட் திரு. ஜூலியஸ எப். பிலிப்ஸ அவர்களால் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது. திரு. சிவஞானசுந்தரம் (டி. ஆர். ஓ.) சாட்சியம் அளித்தபின்பு மாஜிஸ்டிரேட் வழக்கைத் தள்ளுபடி செய்தார். எதிரிகள் சார்பில் நியாயவாதி திரு. டி. ராஜரத்தினம் அவர்கள் ஆஜரானார்.

[ந.-நி.]

யுவதிக்கு 40 ரூபா நஷ்ட ஈடு

பதுளை, அக். 9

பண்டார மெனிக்கா என்னும் 18 வயது யுவதியிடம் சேஷடை புரிந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட டி. எம். புஞ்சு பண்டா என்னும் அக்ராதென்னையைச் சேர்ந்த வாலிபன் 40 ரூபா அபராதம் மேற்படி பெண்ணுக்கு நஷ்டஈடாகச் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டான். அத்துடன் கோர்ட்டுக் கலையும்வரை சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இவ்வாலிபனின் முதலாவது குற்றம் என்ற காரணங்கொண்டே இத்தண்டனை விதிக்கப்பட்டதாகும்.

அரசியலில் மதத்தைப் புகுத்தலாகாது

ஜியோனிசம் நாஜிசமேயாகும்

ஈராக் பிரதிநிதி எச்சரிக்கை

நியூயார்க், அக். 6

ஐக்கிய தேச பாலஸ்தீன கமிட்டியில் ஈராக் பிரதிநிதி ஜமாலி பேசியபோது பின்வருமாறு குறிப்பிட்டார்:-

அரசியலில் மதத்தைப் புகுத்தக் கூடாது. யூதமதம் வேறு. ஜியோனிசம் வேறு ஜூசேயிசம் என்ற யூத மதம் மற்றமதங்களைப்போல பாலஸ் தீனத்திலிருந்து வருவதை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆனால் ஜியோனிசம் என்பது ஜெர்மனியர் நாஜிசத்தைப்போல யூதர்களின் அரசியலியக்கமாகும். இதன் மூலம் யூதர்கள் பாலஸ்தீன வழியாக நுழைந்து அராபிய நாடுகளை ஆக்கிரமிக்க முயல்கிறார்கள். ஜியோனிஸடுகள் அமெரிக்க டாலர் ஆதிக்கத்தையும் கொண்டுவந்து புகுத்த முயல்கிறார்கள். பாலஸ்தீனத்தை அதன் தலைவர்களிடம் ஒப்புவித்துவிட்டு பிரிட்டன் பின்வாங்கவேண்டுமென மாஜி ஈராக்பிரதம மந்திரி நூரிபாஷா தெரிவித்தார். (ராய்ட்டர்)

நாஜிசம் தலை தூக்குகிறது

நூரம்பர்க் விசாரணை; பிரிட்டிஷ் வழக்கறிஞர் எச்சரிக்கை

நூரம்பர்க். அக். 6

நாஜிக் கைதிகளை விசாரித்த நூரம்பர்க் கோர்ட்டில் வழக்குகள் நடத்திய பிரிட்டிஷ் உதவி வழக்கறிஞரும் தொழிற்கட்சி பார்லிமெண்ட் அங்கத்தினருமான மேஜர் ஜோன்ஸ் அறிவிப்பதாவது:--

நாஜிசம் ஐரோப்பாவில் மீண்டும் தலைதூக்குகிறது நாஜிகள் விசாரணையை நிறுத்திவிடும்படி சிலர் ஆலோசனை கூறுவது அபாயகரமானது. ஹிட்லருக்கு உதவியாக இருந்து நாஜிசத்தைப் பலப்படுத்திய நிபுணர்களான குற்றவாளிகளும கொலைபாதகர்களுமான பலர் இன்னும் தலைமறைவாக ஐரோப்பாவெங்கும் இருந்துவருகின்றனர். (ராய்ட்டர்)

யுத்த உயிர்ச் சேதத்தைவிட அதிகம்

ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் பட்டினியால் மடிவர்

லண்டன், அக். 6

உலக உணவு ஸ்தாபன டைரக்டர் ஜெனரல் பின்வருமாறு தெரிவிக்கிறார்:-

உலக உணவு நெருக்கடியின் காரணமாக அடுத்த 12 மாதங்களில் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும ஏராளமான மக்கள் பட்டினியால் மடிவர். யுத்தத்தில் மடிந்தவர்களின் தொகையைவிட இந்தப் பட்டினியால் மடியவிருப்பவர்களின் தொகை அதிகமாக இருக்கும். 1948-வது வருடத்திய சாகுபடிக்குப் பின்னும் உலகில் உணவு நெருக்கடி பல வருடங்கள் நீடித்தே இருக்கும். ஐரோப்பாவைப்போலவே ஆசியாவிலும் உணவுப் பஞ்சம் இருந்து வருகிறது உலக ஜனத்தொகை முழுவதற்கும் உணவு அளிக்க அடுத்த 25 வருடங்களில் 110 சதவிகிதம் உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும். (ராய்ட்டர்)

சாரதியில்லா விமானம் திரும்பியது

ஷயர், அக். 6

சாரதி யில்லாமலே நியூமவுண்ட்லந்திலிருந்து அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து பிரிட்டனுக்குப் பறந்துவந்த டெமெரிக்க விமான "பறக்கும் மூளை" நாளை பிரிட்டனிலிருந்து திரும்பியது. அதில் வந்த சிப்பந்திகளும் திரும்பினர். (ராய்ட்டர்)

நவ இந்தியாவின் கல்வி முறை

தென்னிந்தியா, அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தது

சுதந்திர மக்களின் புதியபொறுப்பு

சென்னை சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் பம்பாய் பிரதமர் பிரசங்கம்

சென்னை, அக். 6

"நமது தேசத்தில் இது ஒரு மிக நெருக்கடியான தருணம். ஆவேச மிருக உணர்ச்சிகளும், விரோதங்களும் தலைவிரித்தாடுகின்றன. இச் சந்தர்ப்பத்தில் நடுநிலைமை ஆராய்ச்சி மனப்பான்மையும், சிக்கலான சமூக ராஜ்ய பிரச்னைகளையும் நிம்மதியாக விஞ்ஞான ரீதியில் நிதானித்து வழிகாணும் பண்புமாணவர்களுக்குப புலப்படச் செய்யவேண்டியது சர்வகலாசாலைகளின் பொறுப்பு. இந்த சர்வகலாசாலையிலிருந்து செல்லும் பட்டதாரிகள் கண்யவான்களாகவும் தாமும் வாழ்ந்து பிறரையும் வாழச் செய்பவர்களாகவும் நல்ல வேலைகளை மேற்கொள்ளும் தொண்டர்களாகவும் ஆகவேண்டும். நவ இந்தியாவின் தேவை இதுதான்" என்று இன்று மாலை சென்னை சர்வகலாசாலை பட்டமளிப்பு விழா பிரசங்கம் நிகழ்த்திய பம்பாய் பிரதமர் ஸ்ரீ பி. ஜி. கெர் கேட்டுக்கொண்டார்.

கவர்னர் ஸர் ஆர்ச்சிபால்ட் நை தலைமை வகித்தார்.

பட்டமளிப்பு விழா நடந்த செனட் ஹவுஸ் தேசிய மூவர்ணக் கொடிகளால் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

திரு. கெர் பேசியபோது மேலும் கூறியதாவது:-

சென்னையின் மேதை

நமது நாட்டின் அறிவு வளர்ச்சிக்கும் பண்பாட்டிற்கும் சென்னை மாகாணம் மகத்தான சேவை செய்திருக்கிறது. தேச வாழ்வின் எல்லாத் துறைகளிலும் முதல்வர்களான மேதாவிகள், நீதிமான்கள், நிர்வாகிகள், ராஜதந்திரிகள் இச் சர்வகலாசாலையிலிருந்து வந்துள்ளனர்.

சிக்கலான பிரச்னைகளைத் தெளிவாக அறிந்துணர்ந்து விளக்கமாக எடுத்துரைத்துப் புரிய வைக்கும் அலாதியான மதி நுட்பமும் ஆராய்ச்சியும் சென்னை மக்களுக்கு இயல்பாக வுள்ள ஒரு அருள் என்று நான் பன்முறை நினைத்துள்ளேன்.

நான்கு பிரதான வேதாந்த சித்தாந்தங்களின் ஸ்தாபகர்களும் இந்த மாகாணத்தவரே.

பொறுப்பு

நமது தேச சரித்திரத்தில் இது நெருக்கடியான தருணம். ஆவேசமான மிருக உணர்ச்சிகளும் விரோதங்களும் தலைவிரித்தாடுகின்றன. இச்சந்தர்ப்பத்தில்தான் நடு நிலை யாராய்ச்சி மனப்பான்மையையும் சிக்கலான சமூக ராஜீய பிரச்னைகளையும் நிம்மதியாக விஞ்ஞான ரீதியில் நிதானித்து வழிகாணும் பண்பும் புலப்படச் செய்வது சர்வகலாசாலைகளின் பொறுப்பாகிறது. உங்கள் மாகாணமும் உங்கள் சர்வகலாசாலையும் இத்துறையில் சாதித்துள்ளவை அபாரம். நாட்டின் எதிர்கால மேன்மைக்கு அவை பெரிதும் பயன்படும்.

சரித்திரம், புதை பொருளாராய்ச்சி, தத்துவம், சங்கீதம், நிர்வாகம், சரீர ரஸாயனம், தொழில் முறை ரஸாயனம் முதலியவற்றிலும் கீழ்த்திசை ஆராய்ச்சியிலும் சென்னை சர்வகலாசாலை அரிய சேவை செய்திருக்கிறது.

கல்விமுறைச் சீரமைப்பிலும் சென்னை சர்வகலாசாலை முக்கியமாக பங்கெடுத்துக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

சுதந்திர வாழ்வில் புதிய கல்வி

புதிதாக சம்பாதித்துள்ள சுதந்திரத்தில் கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு அதன் பலன்களை அனுபவிக்க வேண்டுமானால் கல்வி முறையை நாம் அடியோடு மாற்றியமைப்பது அவசியமாகும்.

சுதந்திரம் ஜனநாயகம், சமத்துவமுள்ள சமுதாயத்தை இந்நாட்டில் தோற்றுவிப்பதாக அரசியல் நிர்ணய சபையில் நாம் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டுள்ளோம். இது கைகூட வேண்டுமாயின் எல்லா வர்க்கங்களையும் வகுப்புகளையும் சேர்ந்த குழந்தைகள் தம் சக்தியையும் திறனையும் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடியவாறு உண்மையான சமய சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும். இத்தகைய வசதியிலாமல் பல மேதைகள் இதற்கு முன் மங்கிப்போய்விட்டனர்.

நல்ல சகோதரப்பான்மையையும் சகிப்புத் தன்மையையும் பொறுப்புணர்ச்சியையும் சுருங்கச் சொல்லின் தார்மிக மனோநிலையை நாம் கல்விச் சீரமைப்பின் மூலம் ஏற்படுத்தினோமாயின் நல்ல சமூதாய அமைப்புக்குச் சிறந்த வகையில் அடிமகாலியவர்களாவோம். புத்தி, ஒழுக்கம், வேலை மூன்றும் நெருக்கமாக இணைந்து வேலை செய்யக் கூடியவன்தான் சந்தோஷி. சமூகத்துக்கு அதிகமான அனுகூலமும் அவனால்தான்.

1912 பேர்களுக்கு சர்வகலாசாலை பட்டம் வழங்கப்பட்டது

இன்றுநடைபெற்ற சென்னை சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவில் 1124 வித்தியார்த்திகள் நேரில் பிரசன்னமாகி சன்னது பெற்றுக்கொண்டனர். இதில் 191 மாணவிகளும் சேர்ந்திருந்தனர். 788 வித்தியார்த்திகள் நேரில் ஆஜராகாமலே சன்னதைப் பெற்றுக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகைகள் கூறுவதென்ன?

தோல்வியுற்ற யூ. என். பி அபேட்சகர்கள்

திரு. சேனநாயக்காவின் வாலைப்பிடித்து 'செனட்' சபைக்குள் நுழைய முயற்சிப்பது திருட்டுத்தனம்

நள்ளிரவில் பிரதமர் வீட்டுக்கு அந்தரங்கமாகப் படையெடுத்தவரை அங்கொடைக்கு அனுப்ப சிபார்சு

"சிங்கள ஜாதிய" என்னும் பத்திரிகை 7-10-47ல் எழுதிய ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு:-

"மண்ணுங்கட்டி மாப்பிள்ளைக்கு, மானங் கெட்ட பொண்ணு" என்றாற் போல தேர்தலில் படுதோல்வியடைந்த பல அபேட்சகர்கள் கவர்னர் மார்க்கமாகவும் பொது ஜனப் பிரதிநிதிகள் மார்க்கமாகவும் "செனட்" சபைக்குள் நுழைந்து விட என்ன வெல்லாமோ முயற்சிகள் செய்து வருவதாக ஒரு வதந்தி உலாவி வருகிறது. பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தவர்களுக்கு கொஞ்சமாவது மானம மரியாதையிருந்தால் இந்த இழிவான முயற்சியில் ஈடுபடுவார்கள் என்று எண்ணமுடியாது.

பெரிய பதவியும் சின்னப் புத்தியும்

தேர்தலுக்கு போட்டியிடாதவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டால் அதைப்பற்றி எவரும் குறைகூற முடியாது. எனினும், தேர்தலில் நின்று தோல்வியடைந்தவர்கள் - வாக்காளர்களால் தெரிவு செய்யப்படாதவர்கள் - ஏதாவது சூழ்ச்சியான மார்க்கமாக "செனட்" சபைக்கு அங்கம் வகிக்க முனைவது மிகவும் நிந்தனையான நடத்தையாகும். இப்படியானால், இவர்களுக்கு உயர்ந்த பதவி வகிக்கக்கூடிய சிறந்த குண விசேஷங்கள் இல்லையென்றே சொல்ல வேண்டும். ஜனநாயக ரீதியில், தேர்தலில் நின்று தோல்வி அல்லது வெற்றியடைந்தாலும், அத்தொகுதி வாக்காளர்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளுவதுதான் உண்மையான பெரிய மனிதனுக்கு இருக்க வேண்டியது சிறந்த குணமாகும். ஆனபடியால் தேசத்தின் பெரிய பிரச்னைகளை தீர்க்கும் பெரிய பதவிகளை விரும்புவோர்களுக்கு, சின்னப்புத்தி இருக்கக்கூடாதென்பதை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

ஜனநாயக ரீதியல்ல

சில விபரீதங்களினால், பார்லிமெண்டுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களிலும் பார்க்க, தோல்வியடைந்தவர்களிடையே செனட் சபைக்கு தகுதிவாய்ந்தவர்கள் இருக்கிறார்களென்பது ஏதோ உண்மைதான். எனினும் பொதுவாக்காளர்களால் ஒதுக்கப்பட்டவர்களை இனமித்திர முறைக்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ பொதுஜனப் பிரதிநிதிகளோ கவர்னரோ தெரிவு செய்வார்களானால் அது எவ்விதத்திலும் ஜனநாயக தர்மத்திற்கு விரோதமானதே; ஜனசம்மதத்தை துச்சமாகக் கருதப்படுவதாகிறது.

ஐ. தே. கட்சிக்கு சாதகம்

தேர்தலில் தோல்வியுற்ற ஐ. தே. கட்சி அபேட்சகர்கள் பலர் கட்சித்தலைவர் - பிரதம மந்திரி திரு. சேனநாயக்காவின் அனுகூலததோடு செனட்சபைக்குள் நுழைந்துவிட முயற்சி செய்கிறார்களென்று எமக்குதெரியக்கூடியதாய் இருக்கிறது. எனினும் திரு சேனநாயக்கா அப்படியொன்றும் செய்யவோ அல்லது கவர்னருக்கு சிபார்சு பண்ணவோ முயற்சிப்பாரென்று நாம் நம்பவில்லை எனினும், தமது கட்சிக்கு அளவுக்குமிஞ்சியே மந்திரிப் பதவிகளையும், காரியதரிசிப் பதவிகளையும் திரு. சேனநாயக்கா நல்கியிருக்கிறார் என்பது இரகசியமல்ல எப்படியாயினும் தோல்வியுற்ற தமது நண்பர்கள் விஷயத்தில் திரு. சேனநாயக்கா மிகவும் எச்சரிக்கையாய் இருப்பார் என்று நம்புகிறோம்.

தினமின 6-10-47 அரசியல் நிருபர் எழுதுவது:-

நேரம்நடு இரவு.கபினெட்சபை மந்திரி ஒருவர் இரவு போசனதத்தை முடித்துக்கொண்டு ஆழ்ந்த நித்திரை செய்து கொண்டிருந்தார். பெரிய இரைச்சலுடன் "ஹார்ன்" சப்தமிட்டுக் கொண்டு ஒரு கார் வந்தது. இதனால் அவதிப்பட்டு கண்விழித்த மந்திரியார் விஷயம் என்னவென்று அறிவதற்காக ஜன்னலருகே வந்தார். இந்தச் சமயத்தில் ஒரு நபர் ஏதோ விஷயமாக சில நிமிஷநேரங்கள் மந்திரியாருடன் பேசவேண்டுமென்று தெரிவித்தார் இதைக் கேட்ட மந்திரியார் அந்த நபரை வெளி விருந்தைக்கு வரும்படி கூறினார்.

மந்திரியாருக்கு சன்மானம்!

இந்த நபரைப்பற்றி சமீப காலத்தில் உண்டான அறிமுகத்தைப்பற்றி மந்திரியாருக்கு ஞாபகமில்லை எனினும், அந்த நபரின் பேச்சுகளிலிருந்து மந்திரிப் பதவிக்கோ அல்லது செனட் அங்கத்திற்கோ விருப்பப்படுவதாக மந்தியாருக்கு தெரிந்தது. ஆச்சரியமென்னவென்றால் அந்த நபர் மந்திரியாருக்கு ஒதுக்கி வைத்திருக்கும் "புதுமையான சன்மான"த்தைப்பற்றி வர்ணிததேயாகும் அதாவது, இந்த ஸம்மானம், அந்தநபர் எதிர்பார்க்கும் "பதவி"க்குப் பிரதிபலனாக இருக்குமென்று மந்திரியாருக்கு தெளிவாகத் தெரிந்துவிட்டது

புதிய நபரின் கேள்வி

"ரஷ்யத் துருப்புகளால் ஆக்ரமிக்கப்பட்ட நகரத்தின் பிரதிநிதிப் பதவி" அந்த நபருக்கு வேண்டியதாய் இருந்தது. பேட்டியின் காரணமாக செனட் சபையில் அங்கத்தினர் பதவிக்கு தம்மை பிரரேபிக்கும் பிரச்னையை மந்திரியால் கிளப்பப்படுமாவென்று இந்த புதிய நபரால் அந்த சமயத்தில் கேட்கப்பட்டது.

அங்கொடைக்கு சிபார்சு

அன்றிரவு, மந்திரியார் வழக்கப்படி இரவு போசனத்தை முடித்துக் கொண்டது மாத்திரமல்ல, நன்றாக "டிரிங்" பண்ணியிருந்தார். இத்துடன் இந்த அர்த்தராத்திரிவேளையில் தூக்கவெறியும் மந்திரியாருக்கு காணப்பட்டது. ஆனபடியால், அந்த நபருக்கு மந்திரியார் பயங்கரமான பதிலளிக்க வேண்டியிருந்தது. மந்திரியார் அந்த நபரைப் பார்த்து நீங்கள் அங்கம் வகிக்கவேண்டியது செனட் சபையில் அல்ல. நீங்கள் அங்கம் வகிக்க தகுதியான இடம் அங்கொடை (பைத்தியக்கார ஆஸ்பத்திரி) யே" என்று விறுவிறுப்பாய்ப்பதில் அளித்தார்.

உண்மையான சம்பவம்தான்

இந்த சம்பவமானது, செனட் சபை அங்கத்துவம் சம்பந்தமாக இந்த நாட்களில் கையாளப்பட்டு வரும் குயுக்தியான நடவடிக்கைகளில் ஒன்றாகும். இது உண்மையான சம்பவமேயன்றி, பொய் வதந்தியல்ல.

பதவி விலை கூறப்படுமா?

செனட் சபையில் அங்கத்துவம் பெறுவது சம்பந்தமான இன்னொரு கேவலமான கதையும் வெளியாய் இருக்கிறது. அதாவது, செனட்சபை அங்கத்துவத்தை ஏதாவதொரு கூடிய விலைக்கு விற்க முயற்சி செய்யப்படுமாயின், இதிலிருந்து தெரிவதென்ன வென்றால், இப்பொழுது தேசத்தில் நிலவியிருக்கும் அயோக்கியமான சம்பவங்களை உறுதிப்படுத்துவதாகும் என்றாகிறது இப்படியான அசோபன சம்பவங்களை பொது மக்கள் துச்சமாகவே கருதுவார்களென்பது உண்மை

நயினாதீவு கொலை வழக்கு

நயினாதீவு, அக். 7

நயினாதீவில் சின்னவன் கந்தன் என்னும் நாவிதனைக் குத்திக்கொலை செய்தார்களென்று அவ்வூரைச் சேர்ந்த வைத்தியலிங்கம் கணபதிப்பிள்ளை, ஆறுமுகம் ஈ. முத்துக்கிருஷ்ணன், கந்தையா வேலாயுதம் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டவழக்கு ஊர்காவற்றுறைமாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணை நடைபெற்றது நீதிபதி விசாரணையின் பின்னர் வழக்கை சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு அனுப்பினார். (ந - நி)

பாராளுமன்ற அங்கத்தவரை நீல நிறச் சட்டைக்காரன் அடித்தானா?

நாவலப்பிட்டி, அக் 7

நாவலப்பிட்டிப் பகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு கே. இராஜலிங்கத்தையும் இன்னும் ஒருவரையும் அடித்ததாகக் கூறப்படும் இருவரைக் கைது செய்வதற்காக, நாவலப்பிட்டி மாஜிஸ்டிரேட் திரு. எச். டபிள்யூ. முத்துராஜா இன்று விருந்து பிறப்பித்துள்ளார்.

கம்பளையில் ஓர்வெல் எஸ்டேட்டிலுள்ள திரு. வீ. அண்ணாமலை கூற்றின்படி, அவரும், திரு. இராஜலிங்கம், திரு. தொண்டமான், திரு. இராமானுஜம், திரு. இராஜப்பிரியர், திரு. இராம சுப்பிரமணியம் ஆகியவர்கள் சென்ற செப்டம்பர் மாதம் 29-ம் தேதி காரில் நாவலப்பிட்டிக்குச் சென்றார்களாம்.

நாவலப்பிட்டியில் ஒரு சிநேகிதனைச் சந்தித்த பின்பு, ரயில்வே ஸ்டேஷனடியில் நிப்பாட்டப்பட்ட காரில் ஏறிக் கொள்வதற்காகச் சென்ற பொழுது ஒரு நீலநிறச் சட்டையணிந்த ஒரு பருமனான மனிதன் திரு. இராஜலிங்கததை அடித்து அவரின் மூக்குக் கண்ணாடியையும் உடைத்தானாம். அந்தப் பருமனான மனிதனை இவர்கள் பிடிக்க எத்தனித்தபொழுது பின்னுக்கிருந்து ஒரு செஞ்சட்டை அணிந்த மனிதன் திரு. அண்ணாமலையை அடித்தானாம்.

அப்பொழுது திரு அண்ணாமலை அந்தச் செஞ்சட்டைக்கார மனிதனைப் பிடித்துக் காருக்குள் ஏற்ற எத்தனிக்கும் பொழுது நீலநிறச் சட்டைக்காரன் ஸடாண்ட் பைப் மூடி ஒன்றை அண்ணாமலையின் மீது வீசினானாம். இதற்குத் தப்பும் பொழுது செஞ்சட்டைக்காரன் அவரின் பிடியைத் தட்டிக் கொண்டு ஓடிவிட்டான். பருமனான மனிதனும் ஓடிவிட்டான்.

அப்பொழுது இவர்கள் காரில் ஏறிச் சென்றார்கள். பின் மோட்டாருக்குக் கற்கள் வீசப்பட்டன. ஒரு கல் ராஜப்பிரியரின் நெற்றியில் விழுந்தது.

வேறு விசாரணை தவணையிடப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர் மீது வழக்கு

பண்டாரவளை, அக் 6

ஹப்புத்தளையில் கஹாகலைத் தோட்டத்தைச் சேர்ந்த 10 தொழிலாளர்கள் சட்ட விரோதமாகக்கூடி, கலகம் செய்து, தோட்டக் கண்டக்டர் ஜாண் பிள்ளைக்கு காயம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு தொடரப்பட்டிருந்த வழக்கு பதுளை டிஸ்டிரிக்ட் கோர்ட் கிரிமினல் செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சென்ற வருடம் பெப்ரவரி மாதம் 12-ம் தேதி இலங்கை இந்தியன் காங்கிரஸ் ஹர்த்தால் நடத்தியபோது காங்கிரஸில் சேராத தொழிலாளர்கள் வேலைக்குச் சென்று திரும்புகையில் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் அவர்களைத் தாக்கியதாகச் சொல்லப்பட்டது. எஸ்டேட் கண்டக்டரும் மற்றொரு தொழிலாளியும் காயமடைந்து ஹப்புத்தளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார்கள். 10 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு இந்தியன் காங்கிரசின் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

குருக்கள் பிணையில் விடுதலை

நயினாதீவு, அக். 7

நயினாதீவு நாக பூஷணி அம்மாள் கோவில் பூசகர் நாகலிங்கக் குருக்கள் சாமிநாதக்குருக்கள் கிராமாந்தரக்கோர்ட்டுநீதிபதியின் கட்டளைக்கு மீறியமையினால் விருந்து பிறக்கப்பட்டுப் பின்னர் கோர்ட்டில் வெளிப்பட்ட பிணையில் விடப்பட்டிருக்கிறார். விசாரணை வருகிற 14-ம் தேதிக்கென ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. (ந - நி)

ஹரிஜன ஆலய பிரவேசம்

சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுதக் கோயில்

கொழும்பு, அக். 6

இன்று மாலை இலங்கை இந்திய ஹரிஜன சேவா சங்கத்தின் அவசரக் கமிட்டிக் கூட்டம் கும்பனித்தெரு, கீழூலேன் 25/20 நிர்.கட்டிடத்தில தலைவர் எல் கே. முத்தையாபிள்ளை தலைமையின் கீழ் நடைபெற்றது அவ்வமயம் சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய டிரஸ்டியிடமிருந்து சங்கத்திற்கு வந்த கடிதம் வாசிக்கப்பட்டது. பின் மேற்படி ஆலயத்தை ஹரிஜனங்களுக்கு திறந்துவிட ஒப்புக்கொண்ட ஆலய நிர்வாகஸதர்களுக்கும் தமிழ் தினசரிப் பத்திரிகைகளுக்கும், காரியதரிசி திரு. பி. என். குமாரசுவாமியவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டதுடன் மேற்படி ஆலயத்தில் இச்சங்கததாரால் வருகிற 14-10-47 செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு ஹரிஜன ஆலயப் பிரவேசம் நடத்துவதென் முடிவு செய்யப்பட்டது என சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

தொழிலாளர் தொண்டருக்கு வரவேற்பு

சிறையிலிருந்து விடுதலையடைந்த சமசமாஜி

கொழும்பு, அக். 7

இன்று காலை சமசமாஜிக் கட்சியைச் சேர்ந்த டானியல் வீரசேன தமது சிறைவாசம் முடிந்து விடுதலையானார். அவர் 1942-ல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சட்ட விரோத துண்டுப் பிரசுரங்கள்விநியோகித்து அதன் காரணமாகக் கைதானவராகும். அவர் வெளிக்கடைச் சிறைச் சாலையில் இருந்து வெளியானதும் அவரை எதிர்கொண்டழைக்க பெருந் திரளான தொழிலாளர் வெளியிலே காத்துகொண்டிருந்தனர்.

சிலர் அவருக்குப் புஷ்பமாலை சூட்ட முயன்றபோது அவர் அதனை வேண்டாம் என மறுத்துவிட்டார். "ஓர் இடதுசாரி அரசாங்கம் ஏற்பட்டபின் தான் நான் மாலைகளை ஏற்க முடியும்" என்று அவர் கூறிவிட்டார்.

அதன்பின் அவர் நகரின் பல வீதிவழியே கொள்ளுப்பிட்டி கட்சிக்காரியாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

கோர்ட்டிலே மானிறைச்சி மான் கொம்பு ஆஜர்

மானைக் கொன்றவருக்கு ரூபா 50 அபராதம்

மட்டக்களப்பு, அக் 5

மான் வேட்டை தடைசெய்யப்பட்ட பருவத்தில் மான்வேட்டை ஆடியதாக அலியார் சின்னலெப்பை மீது தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு 50 ரூபா அபராதம் விதிகக்ப்பட்டது.

இறந்த மானின் இறைச்சி 50 ருத்தலும், மான் கொம்பும் கோர்ட்டு விசாரணையின் போது ஆஜர்செய்யப்பட்டன (ந-நி)

தனயனைக் காப்பாற்ற முயன்ற தாய்

தான் கத்திக் குத்துப்பட்டு இறந்த பரிதாபம்

பாணந்துறை, அக். 6

எகொடஉயணையைச்சேர்ந்த பாத்திமா பீவி ஹுசைன் என்ற பெண் கத்தியால் குத்தப்பட்டு ஆஸ்பத்திரியில் இறந்துபோனாள். அவள் தன் மகனை சார்ள்ஸ பெர்னான்டோ என்பவன் கத்தியால் குத்தச்சென்றதாகவும் அதனைத் தடுக்க முன் சென்றபோது மேற்படி சம்பவம் நிகழ்ந்ததென்றும் தெரிகிறது.

இது சம்பந்தமாக குற்றம் சாட்டப்பட்ட சார்ள்ஸ பெர்னான்டோ சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்படுவான் என்று அறியப்படுகிறது.

போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் கேர்னல் அப்பிள்பி

வேலையினின்றும் ஓய்வு பெறுகிறார்

கொழும்பு, அக். 7

1948-ம் ஆண்டு ஜனுவரி மாதம் முதலாம் தேதியன்று, இலங்கையின் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல், கேர்னல் ஜே. பி அப்பிள்பி தம் பதவியினின்றும் ஓய்வுபெற்றுக்கொள்ளுவதால், இப்பொழுது ரஜாவில் செல்லுவாராம்.

அவர் தமது ரஜாவை இலங்கையிலேயே கழித்து ஜனுவரியில் இங்கிலாந்து செல்வார்.

நாவலப்பிட்டிக்கு ரயில் வசதி

நாவலப்பிட்டி, அக். 7

சமீபத்தில் எற்பட்ட வெள்ளத்தின் காரணமாக சென்ற ஐந்து கிழமைகளாக நாவலப்பிட்டிக்கும் கம்பளைக்கும் புகையிரதங்கள் ஓடவில்லை

இன்று தொடக்கம் பிரயாணிகளை யேற்றி இவ்விரண்டு புகையிரத ஸதானங்களுக்குமிடையே புகையிரதங்கள் மீண்டும் போக்கு வரத்துச்செய்யும்.

நாவலப்பிட்டிக்கு அப்பால் கல்பொடவரைக்கு பிரயாணிகளை பஸ்வண்டிகள் ஏற்றிச் செல்லும்.

பள்ளிச் சிறுவர் வசதிக்காக ஒரு "பேபி" புகையிரதம் கல்பொடைக்கும் நாவலப்பிட்டிக்குமிடையில் போக்கு வரத்து செய்கின்றது.

இனும்!! இனும்!

விவேகானந்தா

1948-ம் ஆண்டு

விவேகானந்தா திருக்குறட் கலண்டர்

கனத்த அட்டையில் ஒட்டப்பட்ட பலவித வர்ணப் படங்களுடன் கூடியது.

ஆர்டர்கள் வரிசைக்கிரமமாகக் கவனிக்கப்படும் தேவைக்கு இப்பொழுதே பதிவு செய்யுங்கள்.

புதிய வெள்ளைக் கிளேஸ் கடிதத்தில் சிவப்பு மையினால் அழகாக அச்சிடப்பெற்றது. ஆங்கிலம், தமிழ், அறபு திகதிகளும், பஞ்சாங்கத்திலுள்ள பிரதான விஷயங்களும், விடுமுறைத் தினங்களும், திருக்குறளும் (கருத்துடன்) அடங்கியது.

புளொக்கின் பிரமாணம்: 4¼" X 3½"
படத்தின் பிரமாணம்: 15" X 10"

100க்கு மேற்	படக்கலண்டர்	100க்கு	விலை	ரூபா 135-00
50	,,	,, 100	,,	,, 140-00
12	,,	,, 1ன்	,,	,, 1-45
12க்குக் கீழ்ப்பட்ட	,,	1ன்	,,	,, 1-70

ஆர்டர்களுக்கு ½ பங்கு முற்பணம் அனுப்புதல் வேண்டும். பார்க்கிற தொகைக்கு வி. பி. மூலம் அனுப்பப்படும். இலங்கையிலுள்ள எவ்வூர்களுக்காயினுஞ் சரி.

அனுப்பும் செலவுகள் யாவும் இனும்!

குறிப்பு:- மேற்படி கலண்டரில் விளம்பரம் செய்ய விரும்புவோர், விபரங்களுக்கு 25-10-47 க்கு முன் எழுதவும்.

மனேஜர்,
விவேகானந்தா பிறெஸ்,
(ரெலிபோன் நம். 117) யாழ்ப்பாணம்.

நவீன முறையில் தயார் செய்யப்பட்ட



சந்திரா பீடியை
வாங்கி உபயோகியுங்கள்.

அரிய நூல் வெளிவந்து விட்டது!

பாக்கிஸ்தான் விளக்கம்

ஜனாப் துர்ராணி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்
320 பக்கங்கள் கிளேஸ் கடிதம்
சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.
முந்துங்கள் விலை ரூ. 3-50
இந்தியா ரூ. 3-8-0.
V. P. வேறு

கிடைக்கும் இடங்கள்:-
V. M. ஷம்சுத்தீன்,
85, பழைய சோனகத்தெரு, கொழும்பு.
எல். கே. ஷேக் முகம்மது,
பிரதர்ஸ் (மரைக்கார் கடை)
பூக்குளம் பார்க்கிற்கு எதிரே
திருச்சினாப்பள்ளி.

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது
இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும் இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கிய வியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,
71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, ,, ,,
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரி சகோதரர் குத்திக் கொலை

அமெரிக்கா மீது விரோதமில்லை

ஜுனுகத் பற்றி பாக்கிஸ்தான் அறிக்கை

லக்னோ, அக். 7

இந்தியா போக்குவரத்து மந்திரியான ராகி அகமது கித்வையின் இளைய சகோதரரும் முசோரி நகர் முனிசிபல் நிர்வாக அதிகாரியுமான ஷாபி அகமது கித்வை முசோரியில் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்.

ஜனமாற்றம்

அமிர்தசரசு, அக். 7

ஒரு மாதத்தில் மேற்குப் பஞ்சாப்பிலிருந்து இந்தியாவுக்கு ஏழரை லட்சம் முஸ்லிம்லீகர்தாரும் கிழக்குப் பஞ்சாப்பிலிருந்து பாக்கிஸ்தானுக்கு எட்டரை லட்சம் முஸ்லிம் அகதிகளும் போயிருக்கிறார்கள். இரு பஞ்சாப் மாகாணங்களிலும் வெள்ளத்தாலும் உணவுப் பஞ்சத்தாலும் நோயாலும் ஜனங்களுக்கு மிகுந்த கஷ்டமேற்பட்டது.

டில்லியில் அமைதி

புதுடில்லி. அக். 7

டில்லியில் வழக்கம்போல அமைதி நிலவி வருகிறது.

ஜுனுகத் தகராறு

கராச்சி, அக். 7

ஜுனுகத்தானுகவே பாக்கிஸ்தானில் சேர்ந்ததென்றும் அதைப்பற்றி சட்ட பூர்வமான தகராறு ஏற்படக்காரணமில்லையென்றும், இருடொமினியன்களின் நல்லுறவைக் கருதி அது சம்பந்தமாக பொதுஜன வாக்கெடுப்பு நடத்தத் தயார் என்றும் அதனருகேயுள்ள இந்திய கருப்புகளை அகற்ற வேண்டுமென்றும் பாக்கிஸ்தான் சர்க்கார் இந்திய சர்க்காருக்குப் பதிலளித்திருக்கிறார்கள்.

பவால்பூர் சேர்ந்தது

பாக்கிஸ்தானில் சிறிய சமஸ்தானங்களும் ஜமீன்களுமாக 45 இருக்கின்றன. அவைகளில் ஒன்றானபவால்பூர் சமஸ்தானம் பாக்கிஸ்தானில் சேர்ந்துவிட்டது. இது இந்தியா எல்லையிலுள்ளது. பத்தரை லட்சம் ஜனத்தொகையுடையது.

அமெரிக்கா மீது விரோதமில்லை

பாக்கிஸ்தானில் அமெரிக்காவுக்கு விரோதமான கிளர்ச்சி இருந்து வருவதாக அறிவிக்கப்படும் செய்தி உண்மையல்லவென்று பாக்கிஸ்தான்சர்க்கார் பிரதிநிதி தெரிவித்தார்.

தென்னாப்பிரிக்கா தூது

டர்பன், அக் 7

தென்னாப்பிரிக்கா மீது ஏற்படுத்தியுள்ள வர்த்தகத் தடையை நீக்கி வட்டமேஜை மகாநாடு கூட்ட ஏற்பாடு செய்யும்படி பாக்கிஸ்தான் சர்க்காரைக் கேட்டுக் கொள்ள தென்னாப்பிரிக்காவிலுள்ள பிற்போக்கு இந்தியரின் தூதுக்கோஷ்டி கராச்சிக்கு புறப்பட்டுச் செல்லப் போகிறது.

லார்டு இஸ்மேக்கு மன்னர் விருந்து

லண்டன், அக். 7

இந்தியா கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டனின் பிரதம ஆலோசகர் லார்டு இஸ்மேக்கு இன்று மன்னர் ஒரு விருந்தளித்தார். (ராய்ட்டர், அ-பிரஸ்)

ஜப்பானின் பண்ட மாற்று வர்த்தகம்

டோக்கியோ, அக். 7

ஜப்பான் வர்த்தக போர்டு தலைவர் அறிவிப்பதாவது:- ஜப்பானுக்கும் மற்ற ஸடெர்லிங் பிரதேசத்திலுள்ள நாடுகளுக்குமிடையே பண்டமாற்று முறையில் வர்த்தகம் நடைபெறும். இந்தியாவிலிருந்து ஜப்பான் பஞ்சு வாங்கியது. அதற்குப் பதில் ஜப்பான் இந்தியாவுக்கு சாமான்களை அனுப்பியிருக்கிறது. அதேபோன்று ஆஸ்திரேலியாவுடனும் வர்த்தகம் செய்ய ஏற்பாடாகி வருகிறது. சமீப காலத்திற்குள் ஜப்பான் தனது சரக்குகளை ஏற்றுமதி செய்து வெளிநாடுகளில் விற்பனை செய்வதற்கு ஏஜெண்டுகள் நியமித்துக்கொள்ள முடியாது.

[ராய்ட்டர்]

பலவிடங்களில் காந்தி ஜெயந்தி

திரிகோணமலையில்

திரிகோணமலை, அக். 5

உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி அவர்களின் 79-வது பிறந்த தினக் கொண்டாட்டம் இன்று பெரிய முற்றவெளியில் இலங்கை இந்தியா ஜில்லாக் கமிட்டி ஆதரவில் கொண்டாடப்பட்டது. இதில் இலங்கை இந்தியப் பிரதிநிதி திரு. கிரி அவர்கள் தலைமை வகித்தார். திரு எம். எஸ். கந்தையா அவர்களால் கொடியேற்றப்பட்டது. மதுரை ஸ்ரீ பரமானந்த பி. கே. எஸ். ஓரிஜினல் பாய்ஸ் நாடகக் கம்பெனியாரால் தேசியக் கீதம் பாடப்பட்டது. பின்பு திரு. கிரி அவர்கள் பொது மனிதன் அரசியல் சுதந்திரம் என்பதையிட்டு என்ன நினைக்கிறான் என்பது பற்றி கீழ் கூறினதாவது: ஒரு சாதாரண மனிதன் தனக்கு மூன்று நேர உணவும், தங்க வசதியான மூன்று அறை உள்ள வீடும், கட்டு உடுப்பு மிருப்பின் அதுவே அவனுடைய சுதந்திரமென நினைக்கிறான். இதற்குக் காரணம் அவனுக்கு இவைகள் கிடைப்பது அருமையாக இருக்கின்றன. இவைகள் முன்னமே கிடைத்திருந்தால் மேற் கூறியவாறு நினையான். திரிகோணமலையிலுள்ள இந்தியக் கூலிகளான ஹரி ஜனங்கள்மதுவருந்துவதை நிறுத்தியிருப்பதாகக் கேட்டபோது, என் மனம் அடங்கா மகிழ்ச்சி அடைந்தது.

சாவகச்சேரி பாராளுமன்ற அங்கத்தவர் திரு. வி. குமாரசுவாமி அவர்கள், காந்தியின் அஹிம்சைப் போருக்கு தமிழரே காரணமாய் இருந்தார்கள். அப்படியெனின் தென்னாப்பிரிக்காவில் தமிழ் கூலி ஜனங்கள் பட்ட அவஸ்தைதான் அவரை இப்போருக்குக் கால் எடுத்து வைக்கச் செய்தது என்பதுபற்றிக் கூறினார்.

நாவலப்பிட்டி பாராளுமன்ற அங்கத்தவர் திரு இராசலிங்கம் அவர்கள் கூறியதாவது:-"காந்திஜியின் வாழ்க்கை முதலில் பரிகாசம் போல இருந்தது. இன்று ஆகில உலகமும் அவரை உன்னத நிலையில் நினைத்துப் போற்றுகின்றது"

திரிகோணமலை பாராளுமன்ற அங்கத்தவர் திரு. சு. சிவபாலன் அவர்கள் 'காந்திஜியும் பொதுஜன சேவையும்' என்பதையிட்டு விளக்கிக் கூறினார். வெறும் மேடைப் பேச்சளவில் ஹரிஜன சேவை செய்யக் கூடாது. உண்மையான தொண்டு செய்வதுதான் மனிதன் செய்யும் கடமை. அதுவே காந்தி அடிகள் செயலுமாகும் என்று சொன்னார். திருமதி. இராஜராஜேஸ்வரி, மஹாத்மா காந்தியின் வாழ்க்கையில் உள்ள முக்கியமானதும் மக்கள் மனதைக் கவரக்கூடியதுமான அறிவுச் சுடர்களை விளக்கினார்.

திரு. இராஜவரோதையப் திரு. கூருணணி, ஆகியவர்களும் பேசினார்கள். (ந-நி)

மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, அக். 5

மட்டக்களப்பில் காந்தி ஜெயந்தி விழா ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. காந்திஜியின் திருவுருவப்படம் தீபாலங்காரம் செய்த ரதத்திலே வைத்து சிவானந்த வித்யாலயத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டது. முற்ற வெளியில் இவ்விழா சம்பந்தமாக நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு. வி. நல்லையா தலைமை வகித்தார். காந்திஜியின் மகத்தான சேவைகள்பற்றி பிரசங்கங்கள் பல இக்கூட்டத்தில் செய்யப்பட்டன. (ந-நி)

பன்விலையில்

இ. இ. கா. தோட்டக் கமிட்டியின் சார்பாக மகாத்மா காந்தி அவர்களின் 79-ம் ஆண்டு ஜெனன தின வைபவத்தை முன்னிட்டு தோட்டத்து காங்கிரஸ மண்டபத்தில் திரு. சோ. பழ பெரிய மதுவத்தேவர் தலைமையின் கீழ் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் ஜில்லா தலைவர் திரு க. கோபால் ஆசாரியார் காரியதரிகள் திரு கருணரத்னம், திரு. வத்துகாமம் உபாத்தியாயர் ருசு இன்னும் பல பிரமுகர்கள் பேசினார்கள்.

எட்டியாந்தொட்டை

அம்பாமலைத் தமிழக் கொல்லை மேல் கணக்கில் மகாத்மா காந்தி ஜெனன விழா கொண்டாடப்பட்டது. திரு. எம். ராமசாமி தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. காந்திஜியின் வாழ்க்கைச் சரித்திரத்தை தலைவர் ராமசாமி எடுத்துக் கூறினார் அ. செல்லன் அ. தோமஸ்ஷி இருவரும் பேசினார்கள்.

பூண்டுலோயாவில்

5-10-47 ஞாயிற்றுக்கிழமை பூண்டுலோயா கந்தசாமி பாடசாலையில் காந்திஜியின் 79-வது ஜெயந்தி விழாவை வெகு விமரிசையாக பூண்டுலோயா பகுதி மக்கள் கொண்டாடினார்கள். பல ஆயிரக்கணக்கான பாட்டாளி மக்கள் ஆண்களும், பெண்களும், வயோதிகர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். மது அரக்கனை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று மக்களிடம் திரு. க. குமாரவேல் கேட்டுக் கொண்டார்.

எல்பிட்டியில்

எல்பிட்டி தமிழ் சகோதரர்களால் (2-10-47) பெரி. ஆறுமுகம் பிள்ளையவர்கள் வியாபார ஸ்தலத்தில் "மகாத்மா காந்தி" உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து தேசிய கீதம் பாடி மகாத்மா காந்தியின் ஜெயந்தி தின விழாவை விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இங்கிரியாவில்

சென்ற ஞாயிறு வாரம் இங்கிரியா ஜில்லாக் காங்கிரஸ மண்டபத்தில் திருவாளர் டி. சாமுவேல் அவர்களின் தலைமையின் கீழ் ஓர் கூட்டம் கூடியது. அத்தருணம் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு திருவாளர்களான வீ. எஸ். வீ. வரதராஜ நாயுடு, எஸ், எம். அன்புராஜ், வீ. ஆறுமுகநாதன், எஸ். கே. மாரியப்பபிள்ளை ஆகியவர்களால் காந்தி மகானின் அருந்தொண்டைப் பற்றியும் ஜீவிய வரலாற்றைப்பற்றியும் சொற்பொழிவாற்றப்பட்டது.

அச்சுவேலியில்

அச்சுவேலி, அக். 2

மகாத்மா காந்தியின் 79-வது பிறந்த தினக் கொண்டாட்டம் இன்று (2-10-47) அச்சுவேலி இளைஞர்களால் கொண்டாடப்பட்டது. மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட காந்திஜியின் சிலை ஊரின் பிரதான வீதிகள் வழிகளாக ஊர்வலமாய்எடுத்துச்செல்லப்பட்டது.

மாலை 6 மணியளவில் திரு எஸ். வீரசிங்கம் அசிரியர் அவர்கள் தலைமையின் கீழ் கூட்டம் நடைபெற்றது. இந்திய தேசிய ராணுவப் பெண்கள் படைக் காரியதரிசி குமாரி எஸ் என். சரஸ்வதி, ஜி. பி. டி. நேசமாணிக்கம், டி. தம்பிமுத்து, எஸ். கே. கந்தையா, கே ஜே. மில்ஸ் ஆகியோரால் காந்திஜியின் தேச சேவைபற்றியும், அகிம்சை, சத்தியம் என்னும் இரு ஆயுதங்களைக் கொண்டு சுதந்திரம் பெற்ற வரலாற்றினையும் விளக்கிப் பேசப்பட்டது. குமாரி எஸ். என். சரஸ்வதி தேசியக் கீதங்கள் பாடினார்.

[ந-நி]

குளத்தில் காணப்பட்ட அழுகிய பிரேதம்

ஆள் யார் என்பது தெரியவில்லை

அநுராதபுரம், அக் 7

திஸ்ஸவேவாக் குளத்தில் ஒரு இளைஞன் மாண்டு கிடக்கக் காணப்பட்டான். அவனது வயது 17 என்று டாக்டராலும் 22 என மரண விசாரணையாளராலும் கருதப்படுகிறது.

மேற்படி இளைஞனின் பிரேதம் சில பாறைகளுக்குச் சமீபம் அழுகிய நிலைமையில் கண்டு பிடிக்கப்பட்டது. அவன் யார் என்பது தெரியவில்லை. ஆயினும் அவன் உள்ளூர்வாசியல்ல என்றே அபிப்பிராயம் நிலவுகிறது.

காக்கிக் காற்சட்டையும், வெள்ளை ஷர்ட்டும் அணிந்திருந்த அவன் பாதங்களில் ஒன்றில் மட்டும் ஒரு கால்மேஸ் காணப்பட்டது; சப்பாத்துகள் காணப்படவில்லை.

புதிய அரசியல் திட்டம் புகுத்தப்படின் புரட்சியுண்டாகும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஏற்று நடத்த முன்வரக் கூடும். ஆனால் இத்திட்டப்படி அரசாங்கத்தை நடத்த தினந்தினமும் ராணுவத்தின் உதவியையும் அதிகார வர்க்கத்தின் இரும்பு பிடியான நடவடிக்கைகளின் உதவியையுமே அந்த அரசாங்கம் நாடவேண்டி வரும். பிரிட்டிஷ்காரர்கள் பிடிவாதமாகத் தங்கள் நோக்கத்தை நிறைவேற்ற முயல்வார்களேயாகில் மலேயாவில் பெரிய புரட்சி ஏற்படுமென்பதை நான் அவர்களுக்கு எச்சரிக்கையாகத் தெரிவித்துக்கொள்கிறேன். பிரிட்டிஷார் பலாத்காரமாக இந்த அரசியல் திட்டத்தைப் புகுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன். மலேயா சுதந்திரத்திற்கு நாம் புதிய அரசியல் திட்டம் வேண்டுமென்ற கோரிக்கையில் ஈடுபட்டிருப்பது போலவே, இந்தோனேஷியாவிலும் இந்தோ-சைனாவிலுமுள்ள மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் நாம் சட்டரீதியாகக் கிளர்ச்சி செய்கிறோம். அவர்கள் புரட்சிகரமாகப் போர் நடத்துகிறார்கள். மலேயா மக்கள் ரத்தம் சிந்துவதை வெறுப்பதில் சட்டரீதியாகப் புரட்சி செய்து வருகிறார்கள். ஆனால் எந்த நாட்டினரும் அறவே புறக்கணிக்கப்படுவார்களேயாகில், அவர்களும் ரத்தப் புரட்சியில் இறங்கும்படி நேரிடுவது சகஜம். இந்தோ-சைனா, இந்தோனேஷியாவைப் போல ரத்தப் புரட்சி மார்க்கத்தைப் பின்பற்றாமலே அகிம்சா முறையில் மக்களுக்கு அதிகாரம் மாற்றப்பட வேண்டுமென்பதற்கே மலேயா மக்கள் சட்டரீதியான கிளர்ச்சி செய்துவருகிறார்கள்.

பிரிட்டிஷ் பத்திரிகையின் குற்றச்சாட்டு

லண்டன், அக். 7

லண்டன் 'டெய்லி மிரர்' பத்திரிகை சமீபத்தில் தென்கிழக்கு ஆசியாவிலும் ஆஸ்திரேலியாவிலும் சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பிய நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:-

மலேயாவின் நிர்வாகச் செலவின் பளு தாங்கமுடியாததொன்றாகும். மக்கள்மீது சுமத்தப்படும் அதிகாரமும் அளவு மீறி இருக்கிறது. சின்னஞ்சிறிய மலேயாவுக்கு 5 கவர்னர்களும் ஒரு கவர்னர் ஜெனரலுமிருக்கிறார்கள். போதாக்குறைக்கு தென்கிழக்கு ஆசியா விசேஷக் கமிஷனர் வேறு இருக்கிறார். மலேயாவிலுள்ள பிரிட்டிஷார் தீவிர ராணுவ மனப்பான்மையும் ஏகாதிபத்திய வெறியுமுடையவர்களாக இருக்கிறார்கள். பிரிட்டன் நெருக்கடியான நிலைமையைக் குறித்து ஆஸ்திரேலியா காட்டும் அனுதாபத்தினளவு கூட அவர்கள் பிரிட்டன் மீது அனுதாபங் காட்டவில்லை.

சோவியத் பிரதிநிதி பயணமானார்

சிங்கப்பூர், அக். 7

9 மாத காலமாக மலேயாரப்பரை வாங்கி ரஷியாவுக்கு ஏற்றுமதி செய்துவந்த சோவியத் வர்த்தகப் பிரதிநிதி ப்ளக்கின் மேலும் தங்கியிருக்க மலேயா சர்க்கார் அனுமதியளிக்க மறுத்துவிட்டபடியால் இன்று சயாமுக்குப் பயணமானார். (ராய்ட்டர்)

சீன சர்வகலாசாலைகளுக்கு 10 வருடத் திட்டம்

ஷாங்கை, அக். 7

உலகிலுள்ள இதர சர்வகலாசாலைகளைப்போல சீன சர்வகலாசாலைகளையும் உயர்தரமாக்குவதற்காக வகுக்கப்பட்ட 10 வருடத் திட்டத்தைச் சீனக் குடியரசுத் தலைவர் சியாங்கை ஷேக் அங்கீகரித்து விட்டார். இத்திட்டத்தை பீக்கிங் சர்வகலாசாலை உப அத்யட்சகர் டாக்டர் ஹுஷி தயாரித்தார். இனி சீன மாணவர்கள் விசேஷ உயர்தரப் படிப்புகளுக்கு அமெரிக்க, பிரிட்டன் போன்ற அந்நிய நாடுகளுக்குச் செல்ல வேண்டிய அவசியமிருக்காது. (ராய்ட்டர்)

பிரேதம் செத்துக்கிடப்பதை அறியாத பொதுஜனங்கள் இக்குளத்துத்தண்ணீரையேகுப்பதற்குப் பாவித்து வந்திருக்கிறார்கள்.

லட்சத்துக்கு மேல் வசூல்

வேலை ஆரம்பிக்கப் படுகிறது

தமிழ் கலைக் களஞ்சிய நிதி

சென்னை, அக். 6

தமிழ் கலைக் களஞ்சியம் தயாரிப்பதற்கு நன்கொடை கொடுத்துதவுமாறு சென்னை சர்க்காரின் கல்வி மந்திரி ஸ்ரீ டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் கேட்டுக்கொண்டாரல்லவா? அதற்கிணங்க மேலும் நன்கொடைகள் கொடுத்திருப்பவர்களின் விவரம் வருமாறு:-

ஏற்கெனவே சேர்ந்துள்ள மொத்தத் தொகை ரூ 101048

ஸ்ரீ ஏ. எம். ஏ முருகப்பசெட்டியார், கல்லல் ரூ. 1001

ஸ்ரீ ஓ. ஆர். எம். எம. எஸ். பி. எஸ். வி. எம். மெய்யப்பசெட்டியார் ரூ. 1001

ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் இந்திய, சர்க்கார் நிதி மந்திரி ரூ 1000

ஸ்ரீ எஸ். ரத்னசபாபதி முதலியார். கோவை ரூ. 1000

ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பசெட்டியார் ரூ 1001

மொத்தம் ரூ. 1,06,051

இனி பணம் அனுப்ப விரும்புகிறவர்கள் ஸ்ரீ எஸ். ஆர். எம். எஸ். டி. ஏ. அண்ணாமலை செட்டியார் பொக்கிஷதார், தமிழ் அகாடமி எவர் கிரீன் தியாகராஜ நகர் சென்னை என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

தமிழ் கலைக் களஞ்சிய நிதிக்கு லட்சம் ரூபாய்க்கு அதிகமாகச் சேர்ந்துவிட்டதால் அந்த நூலைக் கூடிய சீக்கிரத்தில் வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

எட்டயாபுரம் பாரதி ஞாபகார்த்த நிதி

'மைதிலி' நாடகத்தின் மூலம் ரூ. 3500 வசூல்

சென்னை, அக். 6

எட்டயாபுரம் பாரதி ஞாபகார்த்த உதவி நிதிக்காக நேற்று மாலை சிவில் சப்ளை ரிக்ரியேஷன் கிளப் அங்கத்தினர்கள் 'மைதிலி' என்ற தமிழ் நாடகத்தை நடித்தனர். கல்வி மந்திரி ஸ்ரீ. டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் தலைமைவகித்தார். ரூ. 3500 வசூலாயிற்று. சங்க காரியதரிசியின் கோரிக்கைக் கிணங்க வசூலான தொகை ரூ 3500 ஐயும் கல்கி ஆசிரியர் ஸ்ரீ. ஆர். கிருஷ்ணமூர்த்தியிடம் மந்திரி அளித்தார்.

விவசாய டைரக்டராக ஐரோப்பியர் நியமனம்?

இந்தியா பர்மாவால் கழிக்கப்பட்டவர் இலங்கை வருவாராம்

கொழும்பு, அக். 8

திரு. எல். ஜே. செனிவிரத்ன கல்வி இலாகா நிரந்தர காரியதரிசியாக நியமிக்கப்பட்டு விட்டதால் விவசாய டைரக்டர் பதவி காலியாகிவிட்டது. திரு. ஜே. வி. ஆர். ஜோச்சிமே அப்பதவியைத் தற்காலிகமாக மேற்கொள்வார் என்று தெரிகிறது.

ஆனால் விவசாய மந்திரிசபை, வெளியூர்ப் பேர்வழி ஒருவரே அப்பதவிக்கு நியமனமாக வேண்டுமென்று ஆலோசனை கூறியுள்ளது. இது சம்பந்தமாக இந்தியாவிலிருந்து ஐ. எச். பா., ஐ. ஏ. மக்லீன் என்பவர்களில் யாராவது ஒருவர் அல்லது பர்மாவில் கடமை ஆற்றும் திரு. டி. ரிண்ட் என்பவர் நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. இது சம்பந்தமாக இன்னும் தீர்க்கமானமுடிவேற்படவில்லை.

திரு. எஸ். ஏ. ரஹீம்

திரிகோணமலை சுதந்திர சேவா சங்கத்தின் அழைப்புக் கிணங்க கும்பகோணம் திரு எஸ். ஏ. ரஹீம் அவர்கள் திரிகோணமலையில் அக்டோபர் 2-ம் தேதி நடக்க இருக்கும் காந்திஜி ஜெனன தின விழாவில் கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் திரு. ரஹீம் அவர்கள் 2-ம் தேதி வர வசதியின்மையால் கூட்டத்தை அக்டோபர் மாதம் 9-ம் தேதி நடாத்துவார்களென அறியப்படுகிறது.

ரூபா 42,000 பணத்தை அடித்துக்கொண்டு போக முயற்சி

கள்வர் ஒருவரைக் கூட்டுக் கொன்றனர்

ஆயினும் அவர்களுக்குப் பணம் கிடைக்கவில்லை

கொழும்பு, அக். 8

நேற்று முன்தினம் அகதிடியாவுக்குச் சமீபம் ஓரு லொறியில் கொண்டு போகப்பட்ட ரூபா 42,000 ஐ ஒரு கொள்ளைக் கோஷடி கொள்ளை அடிக்கமுயற்சி செய்து அதில் தோல்வியடைந்து விட்டார்கள்.

பிரஸ்தாப லொறியில் பி. டபிள்யூ. டியில் வேலை செய்யும் ஊழியர்களின் சம்பளம் கொண்டுபோகப்பட்டுக் கொண்டிருந்தது.

பணத்தைப் பிடுங்க முனைந்தபோது அதனை வைத்திருந்த குமாஸ்தாவுக்கு உதவி புரியச் சென்ற சுகததாச என்பவர் ரிவால்வரினால் சுடப்பட்டார் அவர் பின்னால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டு அங்கே இறந்துபோனார்.

ரிவால்வரினால் சுட்டுவிட்டு கொள்ளைக்காரர் அவசரமாகக் காரில் ஏறி மாயமாய் மறைந்து விட்டார்கள், பணத்தை அவர்கள் விட்டே சென்று விட்டனர்.

இதுசம்பந்தமாக யாரும் இதுவரை கைதாகவில்லை.

திராவிட நாட்டுத் தலைவர் ஜெயந்தி

கொள்ளுப்பிட்டி, அக். 4

இ. மா. செல்வராஜன் கோட்டை ஷெடியூல்ட் வகுப்பார் சம்மேளனத்தின் ஆதரவில் 'தமிழ்ப் பெரியார்" ஈ. வெ. ராமசாமி 69-வது பிறந்த நாள் கூட்டம் அக்டோபர் 3-ந் தேதி கொள்ளுபிட்டி பிளவர் ரோட் கிருஷ்ணன் இல்லத்தில் உயர் திரு க. கு. சிதம்பரம் தலைமையின் கீழ் நடைபெற்றது. அப்பொழுது தோழர்களான: சி. விஸவநாதன். தாதம்பலம், அ சேவல், பொன்னையா ஆகியோர் "பெரியாரின் பெருந்தொண்டு" என்னும் பொருள்பற்றிப் பேசினர்.

இலங்கைக்கு யாழிவிரை எண்ணெய்

"கோட்டா" அதிகரிகக்பட்டது

கொழும்பு, அக் 8

1947-1948 ம் வருடங்களுக்கு இலங்கைக்கு விதிக்கப்பட்ட யாழிவிரை எண்ணெய் "கோட்டா" இந்திய அரசாங்கத்தால் மேலும் 20 டன்களால் அதிகரிகக்பட்டிருக்கிறது மேற்படி செய்தி இலங்கையில்உள்ள இந்திய வர்த்தகக் கமிஷனரின் அறிக்கை ஒன்றிலிருந்து தெரிகிறது.

கீழ்நாவை இளைஞர் சங்க வருடாந்தக் கூட்டம்

கரவெட்டி, அக் 6

கரவெட்டி கிழக்கு இளைஞர் சங்க வருடாந்தக் கூட்டம் சங்க வாசகசாலை மண்டபத்தில் 5-10-47 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணியளவில் திரு எஸ். கே. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம், காரியதரிசியால் கடந்த கூட்ட அறிக்கையும், தனாதிகாரியால் தனவரவு அறிக்கையும் வாசிக்கப்பட்டது. "இளைஞர் முன்னேற்றம்" என்ற விஷயம் பற்றி திரு. எம். கந்தப்பு எம். நமசிவாயம் ஆகியோர் பேசினர். செல்வன் கே வேலுப்பிள்ளை, எஸ. பகேஸ்வரன் ஆகியோர் இனியகீதங்கள் பாடினர். வேறும் பல இளைஞர்களின் பேச்சின் பின் புதிய ஆண்டுஉத்தியோகஸ்தர் தெரிவு நடைபெற்றது. திரு எஸ கே. சின்னத்தம்பி அவர்கள் தலைவராகவும், திரு. எஸ. தாமோதரம் காரியதரிசியாகவும், திரு. ஏ. சதாசிவம் தனாதிகாரியாகவும் தெரியப்பட்டனர்.

பின் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்ப் பெரியாரின் பிறந்த தின விழாவைக் கொண்டாடி மகிழ்வதுடன், திராவிடநாட்டு தனியரசுக்கு தலைமை தாங்கி நலரசு புரிய நீண்ட நாள் வாழ்ந்து நல்வழி காட்ட சம்மேளனம் வாழ்த்துகிறது.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோட் மருதானை

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்

சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்.

சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு" தமிழ்ப் படம்

வெற்றிகரமான 3-வது வாரம்!

அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது.

மெட்ருஸ் மெயில் புகழ் பாட்லிங்மணி — புதிய நடிகை சுந்தரி

மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பால்கனிக்கு அரைச் சார்ஜ் எடுக்கப்படும்.

கட்டிட வேலைக்கு வேண்டிய எல்லா விதமான சாமான்களும் குறைந்த விலையில் கிடைக்கும் இடம்

செட்டிநாட் கார்ப்பொரேஷன் லிமிடட்

116/118 கெய்சர் வீதி, கொழும்பு.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 9-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org